Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00


# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
(சீ-485)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 02 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்கஃதா 12 (16.01.2003) வியாழக்கிழமை இதழ் : 107





கிளிநொச்சியில் நடைபெற்ற நேற்றைய சிறான் கூட்டத்திற்கு ஹெலிகொப்டரில் வந்திறங்கிய ஜப்பானியப் பிரதிநிதியை விடுதலைப்புலிகளின் சார்பில் தங்கன் வரவேற்பதையும் கூட்டத்தில் கலந்து கொண்ட விடுதலைப்புலிகள், அரசாங்க, நோர்வே, ஜப்பானிய பிரதிநிதிகளையும் படங்களில் காணலாம்.

# யாழ்ப்பாணத்தில் மீள் குடியமர்வுக்கு புலிகள்–அரசு–ஐ.நா கூட்டுக் குழு

## மாவட்ட ரீதியாகவும் குழுக்கள் அமைப்பு

(கிளிநொச்சி)

**யாழ்.குடாநாட்டின் மீள்குடியேற்றத்தினை துரிதப்படுத்துவதற்கு விடுதலைப் புலிகள், அரசாங்கம் ஆகிய தரப்புக்களிலிருந்து தலா ஏழு பேர் வீதமும், அகதிகளுக்கான ஐ.நா.உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய 21 பேர் கொண்ட விசேட செயலணிக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

நேற்று கிளிநொச்சியில் சிறான் அலுவலகத்தில் நடைபெற்ற, வட-கிழக்கிற்கான உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுவின் கூட்டத்தின் போது, யாழ்.குடாநாட்டில் மக்களைத் துரிதமாக மீள்குடியேற்றம் செய்வது சம்பந்தமாக ஆராயப்பட்டு, இறுதியில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டது.

இவ் விசேட செயலணிக்குழுவில் அங்கம் வகிக்கும் தமது தரப்பு பிரதிநிதிகளான ஏழுபேரின் பெயர் விபரங்களை விடுதலைப் புலிகள் இன்று வெளியிடுவார்கள்.

இதேவேளை- அரச தரப்பிலும் ஐ.நா.தரப்பிலும் யார் யாரை நியமிப்பது என்பது குறித்து இன்னும் முடிவு எடுக்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை- மாவட்டரீதியிலும் மீள்குடியேற்றம் தொடர்பான குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. இதில் புலிகள் தரப்பில் மூவரும், அரச தரப்பில் மூவரும் என அறுவர் மாவட்டக் குழுவில் இடம்பெறுவர்.

எனினும்- திருகோணமலை மாவட்டத்துக்கான குழுவினரைத் தெரிவு செய்வதில் முடிவு எதுவும் கிட்டவில்லை. அடுத்த கட்டச் சமாதானப் பேச்சில் இது குறித்து ஆராயப்படவுள்ளது.





அம்மையார் சந்திச்சாலே அது பிரச்சினைக்குரிய அதிவிசேசம் கண்டியளோ...

# கேணல் கருணா – ஒஸ்ரின் இம்மாத இறுதியில் சந்திப்பு

யுத்தநிறுத்த மீறல்கள் மற்றும் அது தொடர்பான பாதுகாப்பு விடயங்கள் குறித்து ஆராய, இம்மாத இறுதியில் அரசு- புலிகள் பிரதிநிதிகளிடையில் சந்திப்பொன்று வன்னியில் நடைபெறவுள்ளது.

இதில் புலிகள் தரப்பிற்கு கிழக்குத் தளபதி கேணல் கருணாவும் அரசதரப்பிற்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவும் தலைமை தாங்குவர்.

பாதுகாப்பு உபகுழு கலைக்கப்பட்ட பின்னர், இக்குழுவினால் கையாளப்படும் விடயங்களை அரசு-புலிகள் தரப்பினர் மாதாந்தம் சந்தித்துப் பேசுவது என கடந்த தாய்லாந்துப் பேச்சில் இணக்கம் காணப்பட்டதற்கு அமையவே இந்த சந்திப்பு நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது. (01)

# பொங்கல் வாழ்த்துடன் ஆரம்பமான கூட்டம்!

## வாழ்த்தோலைகளும் வழங்கப்பட்டன

(கிளிநொச்சி)

வடக்கு - கிழக்கிற்கான உடனடி மனிதாபிமான மற்றும் புனர் வாழ்வு தேவைகளுக்கான உபகுழுவின் கூட்டம் நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

காலை 10 மணிக்கு இக் கூட்டத்திற்கென- நோர்வே நாட்டுப்பிரதிநிதிகளும், ஜப்பானியப்பிரதிநிதிகளும், அரசதரப்புப் பிரதிநிதிகளும், விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு உலங்கு வானூர்திகளில் கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கியபோது அவர்களை, தமிழீழ விடுதலைப் புலிகளின் (10 ஆம் பக்கம் பார்க்க)

# இன்றைய சிறான் கூட்டத்திற்கு உலக வங்கியின் பிரதிநிதிகள்

(கிளிநொச்சி)

வடக்கு-கிழக்கிற்கான உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு தேவைகளை நிறைவு செய்வது தொடர்பாக சிறான் செயலகம் எடுக்கும் நடவடிக்கைகளை உலக வங்கி எவ்வாறு கண்காணிப்பது என்பது பற்றி ஆராய, இன்று நடைபெறும் சிறான் கூட்டத்தில் உலக வங்கியின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

வடக்கு-கிழக்கிற்கான உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு தேவைகளுக்கான உபகுழுவின் நேற்றைய கூட்டத்தின் தொடர்ச்சியாக இன்று மேற்படி விடயம் சம்பந்தமாக ஆராய உலக வங்கியின் தென்னாசியாவிற்கான திட்டமிடல் உதவித் தலைவர் மிக்கோ நிஷிமிசு, மற்றும்

(10ஆம் பக்கம் பார்க்க)

# முப்படைத்தளபதிகளுடன் ஜனாதிபதி–பிரதமர் சந்திப்பு

முப்படைகளின் தளபதிகளையும் ஜனாதிபதியும், பிரதமரும் தனித்தனியே சந்தித்து உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக பேசியுள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் முப்படைத்தளபதிகளுடன் இன்று அலரிமாளிகையில் கலந்துரையாடியுள்ளார். ராணுவத்தளபதி பலகல்ல தலைமையிலான நான்கு ராணுவ உயரதிகாரிகள் இந்தச் சந் திப்பில் கலந்து கொண்டனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கேணல் கிட்டுவின் நினைவாக நல்லூர், தீருவிலில் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

வங்கக்கடலிலே காவியமான கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் பத்தாம் ஆண்டு நினைவினை ஒட்டி, யாழ்.குடாநாடெங்கும் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளதுடன், முக்கிய இடங்கள், பிரதான சந்திகளில் நினைவுப் பதாகைகளும் கட்டப்பட்டுள்ளன.

அத்துடன்- நினைவுநாளான இன்று, கேணல் கிட்டுப் பூங்கா மற்றும் நல்லூர் ஆலய முன்றலிலும் தீருவில் திடலிலும் விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சிறானுக்கு 35 மில்லியன் ரூபா ஜப்பானிய அரசு வழங்கும்

(கிளிநொச்சி)


வடக்கு-கிழக்கிற்கான உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுச் செயலகத்தின் ஆரம்பகட்ட நடவடிக்கைகளுக்காக 35 மில்லியன் ரூபாவை ஜப்பான் அரசு வழங்கவுள்ளது.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற சிறான் கூட்டத்தின் போது கலந்து கொண்ட ஜப்பான் நாட்டுப் பிரதிநிதிகள் மேற்படி நிதி வழங்குவது தொடர்பாக உறுதியளித்துள்ளனர்.

மேலும், சிறான் செயலகத்தின் நிதி சம்பந்தமான நடவடிக்கைகளை கையாள்வதற்கு கணக்காளர் ஒருவரை நியமிக்கும்படி உதவி வழங்கும் நாடுகள் கோரியுள்ளதுடன், சிறான் செயலகத்தின் வங்கிக் கணக்கு விபரங்களை உதவி வழங்

(10ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி 'சிறான்' கூட்டத்திலிருந்து...



சிறானுக்கென கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்ட அலுவலகப் பொருட்களையும், ஆவணங்களையும் ஹெலிகொப்டரிலிருந்து தமிழீழ காவல்துறையினர் இறக்குவதையும், புனர்வாழ்வு ஆலோசகர் ஏ.எஸ்.குணசிங்கத்துடன் அரசியற் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உரையாடிக்கொண்டிருப்பதையும், அரசின் சமாதானச் செயலணியின் பணிப்பாளர் பேனாட் குணதிலகவை தமிழ்ச்செல்வன் கைலாகு கொடுத்து வரவேற்பதையும் படங்களில் காணலாம்.



நேற்றைய சிறான் கூட்டத்தில் பங்குபற்றிய நோர்வே, ஜப்பான் பிரதிநிதிகளையும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்: தே.லிவிங்ஸ்டன்)

## நடைமுறைப் பிரச்சினைகளை ஆராய புறூவ் ஹோவ்டே வன்னி செல்வார்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக ஆராய்வதற்காக, இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜெனரல் புறூவ் ஹோவ்டே இவ்வாரம் வன்னிக்குச் செல்லவுள்ளார்.

உயர் பாதுகாப்பு வலய மீள் குடியமர்வு தொடர்பான பிரச்சினைகள் மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டில் இருக்கும் சில நடைமுறைப்பிரச்சினைகள் குறித்து ஜெனரல் புறூவ் ஹோவ்டே விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுடன் கலந்துரையாடவுள்ளதாக கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

கிளிநொச்சியில் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திப்பதற்கு புறூவ் ஹோவ்டே திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (200)

## வைரஸ் காய்ச்சலினால் இன்னுமொருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் இனந்தெரியாத வைரஸ் காய்ச்சல் காரணமாக, கடந்த 11 நாட்களாக அனுமதிக்கபட்டிருந்தவர் நேற்று மரணமடைந்தார்.

சண்டிலிப்பாய் பகுதியைச் சேர்ந்த தியாகராஜா சண்முகராஜா (வயது-50) மரணமடைந்தவராவார்.

நேற்று மாலை மரணவிசாரணையின் பின் உறவினர்களிடம் சடலம் கையளிக்கப்பட்டது.(கி,ரா)

## ஜப்பான் கணினிப் பயிற்சிக்கு ஒரேயொரு தமிழ் ஆசிரியர்!

கல்வி மனிதவள அமைச்சு- நாட்டிலுள்ள பாடசாலை ஆசிரியர்களிலிருந்து, கணினிப் பயிற்சி பெறுவதற்கென 15 பேரைத் தெரிவு செய்து ஜப்பானுக்கு அனுப்பவுள்ளது.

இவர்கள் ஜப்பானில் ஒரு மாதகால விசேட கணினி பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர் வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை பயணமாகவுள்ளனர்.

13 சிங்கள ஆசிரியர்களும், முஸ்லிம் ஆசிரியர்கள் ஒருவரும் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் ஆசிரியர் ஒருவருமே தெரிவு செய்யப்பட்டவர்களாவர்.

ஜிகா எனப்படும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் இப்புலமைப்பரிசிலை ஏற்பாடு செய்துள்ளது. ஜப்பான் தென்னாசிய நட்புறவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இப் பதினைந்து ஆசிரியர்களும் கணினிப் பயிற்சி பெறவுள்ளனர். (100)


### சிறு விளம்பரம்

**பல் கட்டுதல்**

பல் கட்டுதல், பல் கிளிப்போடுதல் நல்ல முறையில் நியாயமான விலையில் மேற்கொள்ளவும், கண் பரிசோதிக்கப்பட்டு நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளை பெறவும் முடியும். (மொறாயஸ்), ஒளிச்சுடர் பல் மூக்குக் கண்ணாடி அகம், இல.05, பலாலி வீதி, அப்பலோ கிளினிக் முன், யாழ்ப்பாணம். (சி-439)



ராஜா
யாழ்ப்பாணம்.





விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா
10.30, 2.30, 6.00
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும். (சி-398)


## குதிரை வாகனம் திருட்டு

வடலியடைப்பு பாரத்தனை ஐயனார் ஆலயத்திலிருந்த குதிரை வாகனம் நேற்று முன்தினம் களவாடப்பட்டது.

வாகனத்தின் கீழ்ப்பகுதி அப்படியே இருக்க குதிரை மட்டும் களவாடப்பட்டுள்ளது. இத்திருட்டுச்சம்பவம் பற்றி இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக ஆலயப் பரிபாலன சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (43)

## ஆலயத்தில் திருட்டு

தைப்பொங்கல் தினத்திற்கு பெருமாள் கோயில் ஆலயத்திற்கு வழிபடச்சென்ற ஆசிரியை ஒருவரின் கைப்பை திருடப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை பெருமாள் கோயிலை சுற்றி வழிபடுவதற்காக கைப்பையை ஓரிடத்தில் வைத்துவிட்டு மீண்டும் வந்து பார்க்கும் போது அது மாயமாய் காணாமற் போயுள்ளது.

கைப்பையில்- அடையாள அட்டை, ஆசிரிய அடையாள அட்டை, மற்றும் பெறுமதியான பொருட்கள் இருந்ததாகவும், இது பற்றி யாழ். நகரப் பொலிஸாருக்கு முறையிடப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (ரா,கி)


திறைஞ்சனல் சங்கானை
ஜெயசூர்யா, காவ்யா நடித்த
என் மன வானில்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
விசேட காட்சி 9.30 (பு.நே.)
(சி/397)


## யாழ். பாடசாலை மாணவர்கள் கொழும்பு செல்கின்றனர்

பாடசாலைகளை ஒன்றிணைக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 21 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பெப்ரவரி 2 ஆம் திகதி தெற்கிலுள்ள பாடசாலைகளுக்குச் செல்லவுள்ளனர்.

இந்நிகழ்ச்சித் திட்டம் பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை இடம்பெறத் திட்டமிடப்பட்டுள்ளது. எனினும், வட பகுதியிலிருந்து செல்லும் மாணவர்கள் - திட்டமிட்ட நிகழ்ச்சிகளுக்கு மேலாக, 4 ஆம் திகதி கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெறவுள்ள சுதந்திரதின வைபவங்களைக் கண்டுகளிக்கவும், விகாரமாதேவிப் பூங்காவிலுள்ள 'சத்துடு உயன' சிறுவர் விளையாட்டுக் களரியையும் கண்டு களிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் முதற் கட்டமாக, கடந்த நவம்பர் மாதம் 29 ஆம் திகதி தெற்கிலிருந்து பாடசாலை மாணவர்கள், வடக்கிலுள்ள பாடசாலைகளுக்கு வருகை தந்தனர்.

இந்நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை புனர்வாழ்வு, அகதிகள், மீள்குடியமர்த்துகை அமைச்சர் டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தனா மேற்கொண்டுள்ளார்.

## இன்றைய நாள் இனிய நாள்

**16-01-2003 - வியாழக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- பணவரவு, அதிகலாபம், களஸ்திரசுகம், சந்தோஷம். |
| இடபம் | :- கடன் தொல்லை, நம்பிக்கைத் துரோகம், இனசன விரோதம். |
| மிதுனம் | :- அதிகாரம், சத்துரு வெற்றி, இடமாற்றம், நன்மதிப்பு. |
| கர்க்கடகம் | :- விஷபயம், புத்திரரால் நன்மை, பணமுடை, அதிக செலவு. |
| சிங்கம் | :- கெட்ட சகவாசம், சிநேகிதரால் கவலை, சத்துரு வெற்றி. |
| கன்னி | :- திருடர் பயம், பொருள்வரவு, நற்கீர்த்தி, சந்தோஷம். |
| துலாம் | :- குடும்ப மகிழ்ச்சி, இனசன உதவி, சுகக்குறைவு, ஏமாற்றம். |
| விருச்சிகம் | :- தேகசுகக் குறைவு, பிரயாணத்தால் நன்மை, குடும்ப சுகம். |
| தனு | :- காலில் காயம், மனக்கிலேசம், வாகனசுகம், மனபயம். |
| மகரம் | :- பூமி,வாகனம் இவற்றால் நன்மை, குடும்பச் சிறப்பு, அந்நியர் உதவி. |
| கும்பம் | :- ஒழுக்கக்கேடு, கோபமிகுதி, வீண்பழி கேட்டல். |
| மீனம் | :- பிரயாணத்தால் கஷ்டம், பொருள்வரவு, மனமகிழ்ச்சி. |

பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்

# சமாதானப் பேச்சுக்கள் என்று தேசத்துரோகம் நடைபெறுகிறது

## ஜனாதிபதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

நோய்க்குப் பொருந்தாத மருந்தைக் கொடுக்கும் வைத்தியரை



நீக்குவதைத் தவிர வேறுவழியில்லை. ரணில் அரசு - விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவது தவறானது. சமாதானம் என்ற பெயரில் தேசத்துரோகச் செயலையே ரணில் அரசு செய்கிறது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சுவர்ணவாஹினி தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சு முடிவுகள் பற்றி எனக்கு எதுவும் தெரிவிக்கப் படுவதில்லை. வேறு விட்யங்கள் பற்றியே என்னுடன் வந்து பேசுகின்றனர் எனவும் ஜனாதிபதி குற்றஞ் சாட்டினார்.

சமஷ்டி தீர்வுக்குச் சமமான தீர்வையே நாமும் முன்வைத்தோம். ஆனால், இப்போதைய சமஷ்டி முறை, எத்தகைய சமஷ்டி என்பது புரியவில்லை.

பரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நான் ஒரு கடிதத்தின் மூலமே பதவியிலிருந்து துரத்திவிட முடியும். அதனைச் செய்யும்போது முழு உலக ஆதரவையும் என்னால் பெற முடியும்.

நாட்டின் பாதுகாப்புக்குக் குந்தகமாக அவர் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டிருப்பாரேயானால், என்னிடம் உள்ள அதிகாரங்களைப பயன்படுத்தி அவரைத் தூக்கி எறியத் தயங்கமாட்டேன்.

ரணில் விக்கிரமசிங்க, தான் ஒரு நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமர் போல நடந்து கொள்கிறார். அவர், ஏனைய அமைச்சர்களைப் போல ஒரு அமைச்சர்தான். இதையெல்லாம் நான் பொறுமையாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

எல்லைமீறும்போது நான் எனது அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டிவரும் என ஜனாதிபதி சந்திரிகா மேலும் தெரிவித்தார். (01)

## சமுகம் தரக் கோரிக்கை

மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறி எதிர்வரும் 20 ஆம் திகதி துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையால் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

எனவே, இக்கற்கை நெறிக்குத் தெரிவாகிய அனைத்து மாணவர்களையும் அன்றைய தினம் காலை 8.30 இற்குக் கடல்வள அபிவிருத்தி நிலையத்திற்குச் சமுகம்தரும்படி மீன்பிடியியல் துறை இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

## மண் அகழப்படுவதால் வீதி பாதிப்பு

(உடுத்துறை)

வடமராட்சி கிழக்கு - வத்திராயன் கிராமத்திலுள்ள அரசடி வீதியின் இருமருங்கிலும் மண் அகழ்ந்து எடுக்கப்படுவதால், இவ்வீதியை மக்கள் பாவனைக்குப் பயன்படுத்த முடியாதநிலை ஏற்பட்டுவருவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (117)

# வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதை ஆட்சேபித்து ஜே.வி.பி. பேரணிகள்!

## 18 மாவட்டங்களில் நடத்தப்படும்

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் - மக்கள் விடுதலை முன்னணி தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்களை நடத்துவதற்குத் திட்டமிட்டிருக்கின்றது.

எதிர்வரும் 20 ஆம் திகதி 18 மாவட்டங்களில் - தெரிவு செய்யப்பட்ட நகரங்களில் ஆட்சேபப் பேரணிகள் இடம்பெறும் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஆர்ப்பாட்டப் பேரணிகளின் பின்னர் அரசாங்கம் எவ்வாறு பதிலளிக்கின்றது என்பதை அவதானித்து, கொழும்பிலும் இத்தகைய எதிர்ப்புக் கூட்டங்களும் இடம்பெறும் என்று தெரிவித்த அவர், பொதுஜன ஐக்கிய முன்னணி, சிஹல உறுமய போன்றவற்றின் ஒத்துழைப்பைப்பெற எண்ணியிருப்பதாகவும் தெரிவித்தார்.

# மு.கா.கட்சியின் உட்பூசல் குறித்து பாலாவின் கருத்து அபத்தமானதாம்

## ஹக்கீம் கூறுகிறார்

(கொழும்பு)

கட்சியின் உட்பிளவுகள் குறித்து புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கருத்துக் கூறியுள்ளது அபத்தமான தென முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மகாபொல நிலையத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவில் உரையாற்றியபோதே ஹக்கீம் இதனைத் தெரிவித்தார்.

புலிகளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் கட்சி, முஸ்லிம்களுக்குத் தலைமை தாங்குவது குறித்து சந்தேகம் இருந்தால், வட-கிழக்குப் பகுதிகளில் தேர்தலை நடத்தட்டும் என்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார்.

# பேச்சு நம்பிக்கை தருவதால் உதவிக்குத் தயாராகிறோம்!

## உலகவங்கி அதிகாரி தெரிவிப்பு

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற சமாதானப் பேச்சுவார்த்தை நம்பிக்கை தருவதனால், அபிவிருத்திக்கான உதவிகளை வழங்குவதற்கு உலகவங்கி முன்வந்துள்ளது என இலங்கை வந்துள்ள உலகவங்கியின் தெற்காசியப் பிராந்தியத்திற்குப் பொறுப்பான துணைத் தலைவர் மீகோ நிஷிமிசு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வெளிநாட்டுச்செய்தியாளர்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட அவர், போரினால் பாதிகக்கப்பட்டுள்ள வடக்கு - கிழககு மாகாணங்களுக்குக் கூடுதல் உதவி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

நீண்டகால யுத்தத்துக்கு முடிவு காணப்பட்டு நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும். அந்தச் சமாதானம் நாட்டின் அனைத்துப்பகுதிகளுக்கும் சென்றடைய வேண்டும்.

பேச்சுவார்த்தையின் முன்னேற்றங்களை உலகவங்கி அவதானிக்கின்றது என்று தெரிவித்த அவர், நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டிய அவசியம் குறித்து இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்துளளதாகவும் தெரிவித்தார்.

கடநத காலங்களில் அபிவிருத்திக்கு வழஙகப்பட்ட நிதிகள் யுத்தத்திற்கே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், இம்முறை நிதியை வழங்குவதில் உலகவங்கி அவதானமாகவே செயற்படும்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நடைபெறவுள்ள புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளை உலக வங்கி மேற்பார்வை செய்யவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திறகும் தான் விஜயம் செய்யவுளளதாகத் தெரிவித்த அவர்,

வன்னி சென்று விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தையும் சந்திக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## சாயி நிலையத்தில் போயா நாள் ஆன்மீக நிகழ்வுகள்


யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் போயா நாள் ஆன்மீக நிகழ்ச்சிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி - ஓம்காரம், காயத்திரி மந்திர ஜெபம், பஜனை, சொற்பொழிவு ஆகியவற்றுடன் நண்பகல் நாராயண சேவையும் இடம்பெறவுள்ளது.

# நாடு பிரிவதைத் தடுக்க பிக்குகள் உயிர்த் தியாகம் செய்ய தயாராக இருக்க வேண்டும்!

## பிக்குகளின் கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

தேசிய பிக்குகள் முன்னணியைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான



பிக்குகள் நேற்றுமுன்தினம் நுகேகொடயில் மாபெரும் கண்டனக் கூட்டத்தை நடத்தினர்.

விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களின் மூலம் அரசாங்கம் நாட்டைப் பிரிக்கமுனைவதாகக் குற்றஞ்சாட்டியே இக் கண்டனக் கூட்டம் நடத்தப்பட்டது.


இக்கூட்டத்தில் உரையாற்றிய பேராசிரியர் கும்புறுகமுவே நாயக்க தேரர்,

நாட்டைப் பிரிக்க மேற்குலக சக்திகளும் இணைந்துவிட்டன. புலிகளுடனான பேச்சின் மூலம் நாட்டைப் பிரிக்க ரணில் முனைகின்றார். இதனை நிறுத்தாவிட்டால் ரணில் விக்கிரமசிங்கவைத் தூக்கி எறிந்து விடுவோம்.

அமைதி முயற்சிகள் என்ற பெயரில் நாட்டைப் பிரிக்கும் செயலே நடந்து கொண்டிருக்கிறது. அரசாங்கம் உடனடியாக வட - கிழக்குப் பகுதிகளை இரண்டாகப் பிரிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் உரை நிகழ்த்திய தேசிய பிக்குகள் முன்னணித் தலைவர் கணபல்வில சந்திரலோக தேரர்,

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சிங்கள மக்களைத் தவறாக வழிநடத்த முனைகிறது. புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு முன்னர் அரசு ஒன்றைச் சொல்லியது. இப்போது இன்னொன்றைச் செய்கிறது. உடன்பாட்டுக்குப் பின்னர் புலிகள் தனியரசு ஒன்றை அமைத்து வருகின்றனர்.



கும்புறுகமுவே நாயக்க தேரர்,




ரணில், புலிகளின் சொற்படி நடந்தால் அவரைத் தூக்கி எறிந்துவிடும் நிலை ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் - நாட்டைப் பிரிகக அனுமதிக்கக்கூடாது. இதனைத் தடுப்பதற்காகப் பிக்குகள் உயிர்த் தியாகம் செய்யத்தயாராக இருகக வேண்டும்,

புலிகள் ஆயுதங்களைக் கீழே போட முன்னர், உயர்பாதுகாப்பு வலயத்தை அகற்றக் கூடாது என்பன உள்ளிட்ட ஒன்பது தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# பொடா சட்டத்துக்கு எதிராக வைகோ நீதிமன்றில் மனு

## விசாரணைக்கும் ஏற்பு



பொடா சட்டத்துக்கு எதிராக ம.தி.மு.க பொதுச் செயலாளர், இந்திய உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கை நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

இச்சட்டம் அரசியலமைப்பு ரதியாகச் செல்லுபடியற்றது என்று வைகோவினதும் உட்பட மூன்று மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இவற்றுள் வைகோவின் மனுவை விசாரணைக்கு நீதிமன்றம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.


பொடா சட்டம் - மக்களின் பேச்சு, கருத்துச் சுதந்திரத்தைப் பாதிப்பதாகவும், இதன் மூலம் அரசியலமைப்பின் 19 ஆவது சரத்து மீறப்படுவதாகவும் அவரது மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.


# கேணல் கிட்டு - ஒரு தனிமனித சரித்திரம்



தலைவர் பிரபாகரனுடன் மணலாற்றுக் காட்டில் கேணல் கிட்டு.



யாழ். வந்த விஜயகுமாரணதுங்கவுடன் கேணல் கிட்டு.


கேணல் கிட்டுவின் தாயார்.



தமிழகத்தில் வீரமணி, நெடுமாறனுடன் கேணல் கிட்டு.




போர்க்கைதிகள் பரிமாற்றத்தின்போது கேணல் வீரசேகர மற்றும் கப்டன் கொத்தலாவல ஆகியோருடன் கேணல் கிட்டு.


மணலாற்றுப் பாசறையில் கேணல் கிட்டுவின் வகுப்பு.


லண்டனில் கேணல் கிட்டு.


கிட்டுப் பூங்காவில் கிட்டுவின் உருவச்சிலை.


தீருவில் நினைவுத்தூபி திறப்பில் கிட்டம்மாவைத் தேற்றும் தலைவர்

# வரலாற்றுச் சிறப்புமிக்க கந்தரோடையை சிங்கள பௌத்த சின்னமாக்கும் முயற்சி!

1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாண வளாகமாக ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அதன் முதலாவது மாணவத் தொடரில் நானும் இணைந்து கொண்டு தொல்லியலையும், வர


கந்தரோடையிலுள்ள சங்கம்புலவு ஈமக் காட்டிற்குள்ளிருந்து மீட்கப்பட்ட அழகிய வனப்புமிக்க சேது நாணயம்.

லாற்றையும் ஒரு சிறப்புப்பாடமாக 1979 ஆம் ஆண்டு வரையும் கற்றேன். பின்பு 1981 ஆம் ஆண்டிலிருந்து 1983 ஆம் ஆண்டு வரைக்கும் இந்தியாவின் கர்நாடக மாநிலத்திலுள்ள மைசூர் பல்கலைக்கழகத்தில் புராதன வரலாறும், தொல்லியல் கற்கைநெறியில், அதிலும்- தென்னிந்தியக் கட்டட, ஓவியக் கலையில் விசேட கல்வியைக் கற்றேன். அங்கு பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கடமையாற்ற வந்தேன்.

இந்த ஒரு பின்னணியில் எமது பிரதேசத்து தொல்லியல் வளத்தில் கந்தரோடை பெறுகின்ற முக்கியத்துவத்தை நீண்டகாலமாக (22 வருடங்கள்) சேகரித்துப் பெற்றுக்கொண்டதை அடிப்படையாகக் கொண்டு, வரலாற்று முக்கியத்துவத்தை ஆராயும்போது, பெருங் கற்கால (வரலாற்றுக்கு முற்பட்டகாலம்) பண்பாட்டுக்குரிய எச்சங்களில் இருந்து ஆங்கிலேயர் ஆட்சிக்கால எச்சங்கள்

## பகுதி 2

வரைக்கும் தொடர்ச்சியான வகையில் பலதரப்பட்ட தொல்லியல் மூலகங்களைச் சேகரிக்க முடிந்தது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத் தொல்லியல் எச்சங்கள் என்றவகையில் பெருங் கற்காலப் பண்பாட்டு இருப்பினை நன்கு உறுதிப்படுத்தக்கூடிய வகையிலான, இரும்பினால் செய்யப்பட்ட வேல் ஆயுதங்கள், கறுப்பு-சிவப்பு மட்பாண்டத்தினால் செய்யப்பட்ட தாழிகள், பெருங்கற்கால மக்களால் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகின்ற மோதிரங்கள் (நாகர் மோதிரங்கள்), காப்புகள், சங்கு வளையல்கள், விலையுயர்ந்த மணிகளுடன், கி.மு. 8 ஆம் நூற்றாண்டுக்கும் கி.மு. 1 ஆம் நூற்றாண்டுக்கும் உரியதாகக் கருதப்படுகின்ற சாணைக் கல் அம்மியும், குளவியும் பெற்றுக் கொள்ளப்பட்டன.

உண்மையில் கந்தரோடை என்ற புராதன நகரத்தினுடைய அடித்தளத்தில் சிதறிக் காணப்படுகின்ற எச்சங்களுள் பெரும்பாலானவை கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களை உபயோகித்த பெருங்கற்கால மக்களினுடைய பண்பாட்டுச் சிதறல்களாகவே காணப்படுகின்றன. தற்போது சர்ச்சைக்குள்ளாகியிருக்கின்ற தொல்லியல் திணைக்களத்தினுடைய காணிப்பரப்பான "கயற்கன்னி" என்றழைக்கப்படுகின்ற அந்த இடத்தில் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்டுள்ள வட்டமானதும், சதுரமானதும், நீள் சதுரமானதுமான ஒன்றுக்குள் ஒன்று செருகப்பட்ட நிலையில் ஈமப்புதையல் சின்னங்கள் கொண்டுள்ள அடித்தளத்தில்கூட பெருங்கற்கால எச்சங்கள் சிதறிக் காணப்படுகின்றன.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின்போது, குறிப்பாக வட்டவடிவமாக அமைந்துள்ள அத்திவாரக் கட்டடத்துக்குக் கீழே திட்டவட்டமாக அகழக்கூடாது என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டதன் அடிப்படையில், அந்த பௌத்த ஈமச்சின்னங்கள் புதைக்கப்பட்ட அந்த மையத்துக்கு கீழே என்ன இருக்கின்றதென்பதை எவருமே அறிந்து கொள்ளாதவாறு தடுக்கப்பட்டன.

இத்தகைய நோக்கு - இலங்கை தொல்லியல் திணைக்களத்தினுடைய பொதுவான நோக்கமாக இருந்தாலும்கூட, வளர்ந்து வருகின்ற தென்னாசிய தொல்லியல் பண்பாட்டு வகைக்கு இவர்கள், ஒரு சாவுமணி அடித்தது போன்றே இருப்பதனை நாம் இங்கு காண்கின்றோம்.

**செ.கிருஷ்ணராசா**
**நேர்காண்பவர் - சாந்தகுமார்.**

இந்தியாவைப் பொறுத்தவரையும் சரி, பாகிஸ்தானைப் பொறுத்தவரையிலும் சரி, இலங்கையைப் பொறுத்தவரையிலும் சரி Fundamentalism என்று குறிப்பிடப்படுகின்ற மத அடிப்படைவாதக் கருத்துக்களினால் தொல்லியல் ஆய்வுகள் சிதிலமடைந்துபோய் இருந்ததற்கு கந்தரோடையும் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

(அடுத்த வாரம் தொடரும்)

உழைப்போம் உயர்வோம்!

தொழில் மலர்

# யாழ். குடாநாட்டில் கடற்தொழில் நடவடிக்கைகள்

யாழ்.குடாநாட்டின் கடற்தொழில் நடவடிக்கைகள் பற்றிய விபரத்தைக் கடற்தொழில் பரிசோதகர் பிரிவு ரீதியாக ஒவ்வொரு அத்தியாயத்திலும் பார்த்து வருகின்றோம். அந்தவகையில் இந்த அத்தியாயத்தில் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் தாளையடி, ஆழியவளை கடற்தொழில் பரிசோதகர் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களின் கடற்தொழில் நடவடிக்கைகள் குறித்துப் பார்க்கலாம்.

வடமராட்சி கிழக்குப் பிரதேசமானது, பின்தங்கிய ஓர் பிரதேசமாகக் காணப்படுகின்றது. போர் நடவடிக்கைகளும், பௌதீகச் சூழலும் இந்நிலைக்குப் பிரதான காரணங்களாகும். கடற்தொழில் பரிசோதகர் பிரிவான தாளையடிப் பிரதேசத்தினுள் அடங்கும் கடற்தொழில் கிராமங்களாவன,

அன்றும்

மாமுனை
செம்பியன்பற்று
தாளையடி
மருதங்கேணி
வத்திராயன்
உடுத்துறை என்பனவாகும்.

மேற்கூறிய பிரதேசங்களில் வாழும் மக்களின் பிரதான தொழில் கடற்தொழில் ஆகும். இதனை முழு நேரத்தொழிலாகவே இவர்கள் செய்கின்றனர். ஏனெனில், பகுதிநேரமாக வேறு தொழில்கள் செய்வதற்கு ஏற்ற வளங்கள் இப்பிரதேசத்தில் இல்லை.

அத்துடன் இப்பிரதேசத்தின் பிரதான கடற்தொழிலாக விளங்குவது "கரைவலை" இழுத்தல் ஆகும். கரைவலை இழுத்தல் என்பது இப்பிரதேசத்திற்குரிய தனித்துவமான ஒரு தொழில் ஆகும். கரைவலைத் தொழில் செய்வதற்கு மணற்பாங்கான கரை இருக்க வேண்டும். அத்துடன் கரையிலிருந்து சிறிது தூரத்திலேயே கடல் ஆழமாக இருக்க வேண்டும்.

கரைவலை இழுப்பவர்கள் நீளமான வலையை எடுத்து, ஒரு முனையை கரையில் ஒருவரின் கையில் கொடுத்துவிட்டு, மறுமுனையைக் கட்டுமரம் மூலம் கடலினுள் குறிப்பிட்ட தூரம் சென்று, குறிப்பிட்ட கடற்பரப்பை சிறைப்படுத்தியவாறு அதைக் கரைக்குக் கொண்டு வருவர்.

சிறைப்பட்டுள்ள கடலில் உள்ள மீன்கள் வலையில் காணப்படும் மடியில் அகப்படத்தொடங்கும். பின்னர் கரையில் பல பேர் சேர்ந்து நின்று இழுப்பார்கள். வலையில் மீன்கள் அகப்பட்ட நிலையில் அவை கரைக்குக் கொண்டுவரப்படும்.

இம்முறைமூலம் பல இன மீன்கள் ஒரேதடவையில் அகப்பட்டாலும், இப்பிரதேசத்தில் பிடிக்கப்படும் பிரதான மீன் இனமாக நெத்தலியே விளங்குகின்றது.

1983 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நெத்தலி மீனினம் இங்கிருந்து நாட்டின் பல பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டது. அத்துடன் சிலாபம் பகுதியிலுள்ள உடப்பு எனும் பிரதேசத்திலுள்ள கடற்தொழிலாளர்கள் இங்கு வந்து வாடி அமைத்துத் தொழிலில் ஈடுபட்டனர். தற்போது இங்கு 32 கரைவலைத் தொழில்கள் உள்ளன.

தாளையடிப் பிரதேசத்திலுள்ள கடற்தொழிலாளர்கள் விபரம்

| பிரதேசம் | குடும்ப எண்ணிக்கை | கடற்தொழிலாளர் எண்ணிக்கை | குடித்தொகை |
|---|---|---|---|
| மாமுனை | 85 | 85 | 420 |
| செம்பியன்பற்று | 110 | 100 | 496 |
| தாளையடி | 80 | 82 | 294 |
| மருதங்கேணி | 128 | 126 | 488 |
| வத்திராயன் | 240 | 242 | 1,098 |
| உடுத்துறை | 370 | 378 | 1,720 |

ஆழியவளைக் கடற்தொழில் பரிசோதகர் பிரிவினுள் அடங்கும் பிரதேசங்களாவன -

ஆழியவளை
வெற்றிலைக்கேணி
கட்டைக்காடு
சுண்டிக்குளம் என்பனவாகும்.

ஆழியவளைப்பிரதேசத்திலுள்ள கடற்தொழிலாளர்கள் விபரம்

| பிரதேசம் | குடும்பங்கள் | கடற்தொழிலாளர் எண். | குடித்தொகை |
|---|---|---|---|
| ஆழியவளை | 280 | 270 | 1,400 |
| வெற்றிலைக்கேணி | 180 | 170 | 900 |
| கட்டைக்காடு | 250 | 240 | 1,350 |
| சுண்டிக்குளம் | 20 | 15 | 80 |

இப்பிரதேசத்தில் தற்போது 200 F.G.B எனப்படும் தும்புக்கண்ணாடி

இன்றும்

வள்ளங்களும், 150 கட்டுமரங்களும் தொழிலில் ஈடுபடுகின்றன.

தற்போது இப்பிரதேசங்களில் கடற்தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகளாவன,

◆ இப்பகுதி போரினால் மோசமான அழிவுகளைச் சந்தித்திருக்கின்றது. குறிப்பாக, நாகர்கோவிலில் இருந்து சுண்டிக்குளம் வரையிலான பகுதிகள் முற்றாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இப்பிரதேச மக்களின் வாழ்க்கைத்தரத்தைப் பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டியது முக்கியமான பிரச்சினையாகும்.

◆ போக்குவரத்து என்பது இப்பிரதேசத்தின் பிரதான பிரச்சினையாக உள்ளது. ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தியில் போக்குவரத்து கணிசமான செல்வாக்குச் செலுத்துகின்றது. தற்போது நாகர்கோவில் பாதை மூடப்பட்டிருப்பதனால் இப்பிரதேச மக்களின் போக்குவரத்து பெரும் பாதிப்புக்குளாகியுள்ளது. எனவே, போக்குவரத்தைச் சீர்செய்வதற்கு நாகர்கோவில் பாதையைத் திறக்க வேண்டும். அத்துடன் புதுக்காட்டிலிருந்து தாளையடி வரையிலான பாதையைத் சீரமைக்க வேண்டும்.

◆ தற்போது இப்பிரதேசத்தில் பெருமளவு மீன்கள் பிடிக்கப்படுகின்றபோதும் சந்தைப்படுத்தல் என்பது பெரியதொரு பிரச்சினையாகவுள்ளது. தென்பகுதியிலிருந்து யாழ்.குடாநாட்டுக்கு மீன்களை கொள்வனவு செய்யவரும் "கூலர்" வாகனங்களை இப்பிரதேசத்திற்குக் கொண்டு வருதல் மூலம் சந்தைப்படுத்தல் பிரச்சினையை ஓரளவு தீர்க்கலாம்.

◆ மிதிவெடிகள் இப்பிரதேசத்தில் பெருமளவு காணப்படுகின்றது. இவற்றை முற்றுமுழுதாக அகற்ற வேண்டியது முக்கியமான தேவையாகவுள்ளது.

◆ இப்பிரதேச மீனவர்களின் வீடுகள் முற்றுமுழுதாக அழிவடைந்து விட்டதால் இவர்களுக்கு வீட்டு வசதி செய்யப்படவேண்டியது அவசியமானது. இதற்கு G.T.Z போன்ற அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவி அவசியமாகின்றது.

◆ இப்பிரதேசத்தில் பிரதானமாக ஐஸ் தொழிற்சாலை ஒன்றை அமைக்க வேண்டும். ஏனெனில், பெருமளவு மீன் பிடிபடும் காலங்களில் சந்தைப்படுத்த வசதியின்மையால், மீன்கள் வீணாகும் நிலையுள்ளது. எனவே ஐஸ் கட்டிகள் கிடைத்தால் அம்மீன்களை ஐஸ் இட்டு சந்தைப்படுத்தலாம்.

◆ இப்பிரதேசத்திற்கு வெளிச்சவீடு எதுவும் கிடையாது. இது சமுத்திரத்துடன் கூடிய பிரதேசம். மீனவர்கள் ஆழ்கடலில் தொழிலில் ஈடுபட்டுவிட்டு பின் கரையை அடைவதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். அத்துடன் திசைமாறிச் செல்லும் வாய்ப்புகளும் உள்ளன. எனவே வெளிச்சவீடு அமைக்கப்பட வேண்டியது ஒரு அவசியத் தேவையாகும்.

◆ நவீன மீன்பிடிக்கலங்களை அறிமுகப்படுத்த வேண்டும். ஏனெனில் இப்போதும் மீனவர்கள் பாரம்பரிய முறைகளிலேயே மீன்களைப் பிடிக்கின்றனர். எனவே, நவீனமுறைகளையும், நவீன கலங்களையும் அறிமுகப்படுத்துவதன மூலம் பெருமளவு மீன்களைப் பிடித்து குடாநாட்டின் மொத்த மீனுற்பத்தியை அதிகரித்துப் பொருளாதாரத்தை உயர்த்தலாம்.

தமிழின்பன்

---

# யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக பங்குச் சந்தை வர்த்தகம்

ஓர் அறிமுகம்



பங்குச் சந்தை என்பது பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள் வாங்குவதற்கும் விற்பதற்குமான இடமாகத் திகழ்கின்றது. இலங்கையில் பங்குச்சந்தை வாணிபம் ஒரு நூற்றாண்டுக்கு முன்பிருந்தே நடைபெற்று வருகின்றது. கொழும்புப் பங்குச்சந்தையின் ஆரம்பகாலம் 19 நூற்றாண்டு வரை நீடித்தது. இக்காலகட்டங்களில் இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகளில் பிரித்தானிய வர்த்தகர் பிரதான பங்கு வகித்தனர்.

1870களில் கோப்பிச் செய்கை இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பயிராகப் பயிரப்பட்டு வந்தது. அக்கால இறுதிப்பகுதியில் கோப்பிச் செய்கைக்கு ஏற்பட்ட நோய் காரணமாக அப்பயிர் இலங்கைக்குப் பொருத்தமற்ற பயிராகக் கருதப்பட்டது.

அதேவேளையில், தேயிலையைப் பயிரிடுவதற்கு ஏற்ற சூழல் இலங்கையில் காணப்பட்டமையால் அதனைப் பயிரிடுவதற்குத் தேவையான மூலதனத்தினைத் திரட்டுவதில் பாரிய சிக்கல் ஏற்பட்டது. ஏனெனில், கோப்பிச் செய்கை மூலம் உழைத்த மிகை வருமானங்களின் பெரும் பகுதியைப் பிரித்தானியர் தமது நாட்டுக்கு அனுப்பியதன் காரணமாகவே இச்சிக்கல் ஏற்பட்டது.

எனவே, இச்சிக்கலைத் தீர்க்கும் பொருட்டு கொழும்பு, லண்டன் போன்ற நகரங்களில் பொதுக்கம்பனிகளில் பதிவுசெய்யப்பட்டு அவற்றின் பங்குகளை வழங்குவதன்மூலம் தேயிலைச் செய்கைக்கு அவசியமான மூலதனங்களைத் திரட்டிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதன் பெறுபேறாக- 1896 ஆம் ஆண்டு கொழும்புப் பங்குச் சந்தை இலங்கையில் தோற்றம் பெற்றது. இதன் ஆரம்பகாலகட்டத்தில் கொழும்புப் பங்குச்சந்தை, பங்குத் தரகர் சங்கம் மூலம் நிர்வாகம் செய்யப்பட்டது. 1904 ஆம் ஆண்டில் பங்குத் தரகர் சங்கம் கொழும்புத் தரகர் சங்கம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இலண்டன் பங்குச் சந்தையின் சட்டக்கோவையினை அடிப்படையாக வைத்து அதன் தொழிற்பாடுகள் கொழும்புத் தரகர் சங்கம் மூலம் மேற்கொள்ளப்பட்டன.

1948 இல் அறிமுகம் செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டவிதிகளானது, வெளிநாட்டுக் கம்பனிகளின் பங்குக் கைமாற்றலை முற்றாகத் தடையாக்கியது. அன்று முதல் கொழும்புப் பங்குச்சந்தை முற்றுமுழுதாக உள்நாட்டுக் கம்பனிகளின் பங்குக் கைமாற்றல்களுக்கான, வரையறுக்கப்பட்ட சந்தையாக மாறியது.

1984 இல் கொழும்புத் தரகர் சங்கத்திற்கு எதிராகப் பங்குத் தரகர் சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது. பின்பு பொதுமக்களிடையே ஏற்பட்ட சிக்கலை இல்லாதொழிக்கும் வண்ணம், 1985 இல் இரு சங்கங்களும் ஒன்றிணைக்கப்பட்டு கொழும்புப் பங்குச்சந்தையை நிர்வகிக்கக் கூடிய அமைப்பாகப் பிணைகள் பரிமாற்று நிறுவனம் (Colombo Stock Exchange) ஆரம்பிக்கப்பட்டது.

இதன் பின்னரே கொழும்புப் பிணைகள் பரிமாற்று நிறுவனத்தின் இரண்டாந்தரச் சந்தையான (Secondary Market) கொழும்புப் பங்குச் சந்தை பொதுமக்களுக்காகப் பங்குக் கைமாற்றல்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டது. அன்றுமுதல் பங்குச்சந்தையின் இரண்டாந்தர வியாபாரத் தளத்தில் திறந்த கத்தல் முறை (Open Outcry System) பங்குகள் கைமாற்றம் பெறும் நடைமுறை ஆரம்பமாகியது. 1977 ஆம் ஆண்டு ஜூன் முதல் பங்குச்சந்தையின் பங்குகள் கைமாற்றகங்கள் தன்னியக்க வியாபார முறைமைக்கு (Automated Trading System) மாற்றப்பட்டது.

- வசந்தகுமார்.



தற்போது உள்ள முறையின் பிரகாரம் முதலீட்டாளர்கள் அவர்களுக்கான பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ இடப்படும் கட்டளை, கொள்வனவுத் தரகர்களுக்கு அறிவிக்கப்படும்பொழுது அக்கட்டளைகள் தரகர்களால் தமது நிறுவனங்களில் உள்ள கணினிகளுக்கு உட்பாய்ச்சப்படும்.

அக்கட்டளைகள் அக்கணினிகளில் உள்ள தன்னியகக மின்னலைகள்மூலம் கொழும்புப் பங்குச் சந்தையின் பங்குகள் கைமாற்றம் செய்வதற்குத் தயாராக உள்ள மத்திய கணினிப் பொறிக்கு உட்பாய்ச்சப்படும். ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் கொள்வனவுக் கட்டளையின் விலை, நேரம், பங்குகளின் எண்ணிக்கை என்பனவற்றுக்குச் சமமான இன்னொரு விற்பனைக் கட்டளை அக்கணினியில் சந்திக்குமாயின், அவ்விரு கட்டளைகளும் சமநிலையடைந்து பங்குகள் கைமாற்றம் நிகழ்கின்றன.

அக்கட்டளைகளுக்கு அமைய மத்திய வைப்புத் திட்டத்தில் (Central Depository System) விற்பனையாளரினதும் கொள்வனவாளரினதும் கணக்குகள்மீது வரவு செலவுப் பதிவுகள் நிகழ்ந்து பங்குக் கைமாற்றல்கள் உறுதிப்படுத்துவதன்மூலம் அக்கணினியினால் அதற்கான ஆவணம் வெளியிடப்படும்.

இதன் மூலம் முதலீட்டாளர்கள் தமது பங்குச்சந்தை நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்வதற்கும் பங்குகளின் விலைகள், அவற்றின் எண்ணிக்கைகள் போன்ற விபரங்களை அறிந்து கொள்ளவும் இம்முறை சிறப்பாக அமைகின்றது.

வெளி நாட்டு முதலீட்டாளர்களும் எமது சந்தை பற்றிய தகவல்களை இதன் மூலம் அறிந்து கொள்வதற்கு வசதியாக உள்ளது.

தற்போது பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு 2 வழிவகைகள் உள்ளன.

முதனிலை வழங்கல்
(Initial Public Offer)
இடைநிலை வழங்கல்
(Secondary Market)

இங்கு முதனிலை வழங்கலில் பங்கு வழங்கலைச் செய்யும் கம்பனி தகவற்தொகுப்பு ஒன்றை வெளியிடுகின்றது.

(அடுத்த வாரம் தொடரும்)

# குடாநாட்டு கைத்தொழில்களின்

## இன்றைய நிலை என்ன?

இன்று உலக நாடுகள் பலவும் கைத்தொழிற்துறையில் கூடிய கவனம் செலுத்தி அதில் வளர்ச்சியடைந்து - வளர்ச்சியடைந்த நாடுகள் என்ற நிலையை அடைந்துள்ளன. அதேவேளை, வளர்ந்துவரும் நாடுகள்கூட கைத்தொழில் துறையையே முன்னெடுத்துச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இலங்கையில்கூட 1977 ஆம் ஆண்டிற்குப் பின் திறந்த பொருளாதாரக் கொள்கை அறிமுகமாகிய நிலையில், கைத்தொழில் உற்பத்திகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதுடன் பல ஊக்குவிப்புக்களும் அளிக்கப்பட்டன.

இன்று கைத்தொழில் தனக்கென ஒரு தனி இடத்தினை உலகில் பெற்று நிற்பதனை காணக்கூடியதாக்வுள்ளது. எனவே எமது பிரதேசத்தின் கைத்தொழில் எந்த நிலையில் உள்ளது என்பதனையும், முன்னைய காலங்களில் அதன் நிலை என்ன? என்பதையும் இங்கு நோக்குதல் சிறந்ததாகும். குறிப்பாக, இக்கட்டுரை யாழ்.குடாநாட்டுக் கைத்தொழிலின் கடந்தகால நிலை என்ன? இன்றைய நிலை என்ன? அது அனுபவிக்கும் பிரச்சினைகள் என்ன? தீர்வுகளாக எவற்றை முன்வைக்கலாம்? போன்ற பல்வேறு அம்சங்களை ஆய்வுசெய்யும்.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரையில் அன்றும் இன்றும் விவசாயமே முன்னணித் துறையாக விளங்குகின்றது. இது ஜீவனோபாயத் துறையாகவும் அதேநேரம் வருமானத்தைப் பெற்றுத்தரும் துறையாகவும் விளங்குகின்றது, இதனால், இங்கு கைத்தொழிற்துறை என்பது அன்று பெரிதாக வளர்ச்சி அடையவில்லை என்றே சொல்லிக்கொள்ளலாம். ஆயினும், கைத்தொழிற்புரட்சியைத் தொடர்ந்து உலகளாவியரீதியில் ஏற்பட்ட மாற்றங்கள் இலங்கையைப் பாதிக்க, யாழ்.குடாநாட்டிலும் அதனது தாக்கங்கள் உணரப்பட்டன.

ஆரம்ப காலங்களில் குடிசைக் கைத்தொழில்கள் காணப்பட்டாலும் கூட 1960-70 காலப்பகுதிகளில் யாழ்ப்பாணத்தில் அனைத்து வகைக் கைத்தொழில்களும் காலூன்றத் தொடங்கின எனலாம். இவ்வாறு வளர்ந்துவரும் யாழ்ப்பாணக் கைத்தொழில்களை 4 வகைகளாக ஆய்வு செய்வது சிறந்ததாகும்.

### பாரிய கைத்தொழில்கள்

குடாநாட்டைப் பொறுத்தவரையில் பாரிய நிறுவனங்களின் எண்ணிக்கை மிக மிகக்குறைவு. இவ்வாறுள்ள நிறுவனங்களைக்கூட விரல்விட்டு எண்ணிவிடலாம். அவை இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு உப்பளம் போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கூறமுடியும். இவை அரச கைத்தொழில் நிறுவனங்களே ஆகும். தனியாரின் பாரிய நிறுவனங்கள் எவையும் குடாநாடடில் இல்லை.

இதற்கு உள்ளூரில் தனியாரிடம் போதியளவு மூலதன வசதியின்மை, வெளிநாடடு நிறுவனங்கள், யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட போர்ச் சூழலால் முதலீடு செய்ய முன்வராமை போன்ற காரணங்களைக் குறிபிட்டுக் கூறமுடியும். அரசதுறை நிறுவனங்களைப் பொறுத்தவரை ஆரம்பகாலங்களில் அவை சிறப்பாக இயங்கியதோடு இலாபமீட்டும் நிறுவனங்களாகவும் காணப்பட்டன. மேலும் இவை பலருக்கு நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளை வழங்கி வந்தன.

ஆயினும், 1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் போரின் தீவிரத்தினால் இப்பாரிய கைத்தொழில் நிறுவனங்கள் தமது செயற்பாடுகளை இழந்தன. இதனால் ஏற்பட்ட பாதிப்புக்கள பல. இதனை இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தின் (காங்கேசன்துறை சீமெந்து ஆலை) தரவுகள் மூலம் அறியலாம்.

| விபரம் | 1985 (ரூபா) | 1997 (ரூபா) |
|---|---|---|
| மொத்தப் புரள்மானம் | 749,510,479.00 | 14,509,924.00 |

*ஊழியர் தொடர்பான விபரம்*

| வகை | 1985-12-31 | 1997-12-31 |
|---|---|---|
| 1. நிறைவேற்றுத் தரம் | 42 | 26 |
| 2. தொழில்நுட்ப மேற்பார்வையாளர்கள் | 121 | 27 |
| 3. இலிகிதர் மற்றும் தொடர்புடைய சேவை | 116 | 44 |
| 4. கையால் செய்ததும் உடல் உழைப்பும் | 1,026 | 499 |
| 5. அமைய/ஒப்பந்த தற்காலிக ஊழியர் | 84 | -- |
| 6. கூட்டுத்தாபன பயிற்சி பெறுவோர் | 12 | -- |
| மொத்தம் | 1401 | 596 |

மேற்காட்டப்பட்ட தரவுகளின்படி, விற்பனையானது பாரிய வீழ்ச்சி அடைந்துள்ளது. கடந்த 11 ஆண்டுகளின்பின் விற்பனை 755,000,555 ரூபாவால் வீழ்ச்சியடைந்துள்ளது.

அத்துடன், 1997 ஆம் ஆண்டு விற்பனையானது உற்பத்தி தவிர்ந்த ஏனைய வருமானங்கள் மூலம் பெறப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன், ஊழியர்களின் எண்ணிக்கையும் கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது.

1997 ஆம் ஆண்டு அமைய அடிப்படையிலான ஊழியர்கள் எவரும் காணப்படவில்லை. 1990 ஆம் ஆண்டைத் தொடர்ந்து புதிதாக ஊழியர்கள் எவரும் உள்வாங்கப்படவில்லை. இதனை விட காங்கேசன்துறை சீமெந்து ஆலையானது ஒருகாலத்தில் அரசுக்குக்கூட கடனுதவிகளை வழங்கி வந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும், இலங்கை முழுவதற்கும் சீமெந்தினை விநியோகிக்கும் ஏகவிநியோகஸ்தராகவும் காணப்பட்டது.

1985 ஆம் ஆண்டு கூட்டுத்தாபனம் புத்தளத்தில் நிறுவப்பட்டுள்ள ஒரு தொழிற்சாலையையும், காலியில் சீமெந்து அரைத்தல், அடைத்தல் பொறித்தொகுதியையும் கொண்டிருந்ததுடன் காங்கேசன்துறையில் அமைந்துள்ள லங்கா சீமெந்து லிமிட்டெட்டில் 67% கட்டுப்படுத்தும் அதிகாரத்தையும் பெற்றிருந்தது.

இவ்வாறாக, 1990 ஆம் ஆண்டின் நடுப்பகுதியுடன் பாரிய கைத்தொழில் நிறுவனங்கள் அனைத்தும் யாழ்.குடாநாட்டில் செயலிழந்தன.



அத்துடன், இன்று இவை அமைந்துள்ள இடங்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களாகவோ போரினால் முற்றாக அழிந்த இடங்களாகவோ காணப்படுகின்றன. இதனால் இவற்றை மீண்டும் செயற்பட வைப்பது என்பது இன்றும் கூட பின்தள்ளப்பட்டுக் கொண்டு செல்கின்றது. இதனால் இந்நிறுவனங்களில் வேலை செய்கின்ற பலரும் இன்று வேலையிழந்து நிற்கின்றனர். மறைமுகமான வேலைவாய்ப்புக்களும் இழக்கப்பட்டுள்ளன. அத்துடன், இவற்றின் உற்பத்திப் பொருட்களை இன்று வேறு இடங்களில் இருந்து பெறவேண்டியுள்ளதுடன், இவற்றின் விலைகளும் உயர்வாகக் காணப்படுகின்றன. 10 வருடங்களுக்கு மேல் செயற்படாத இந்நிறுவனங்களை உடன் செயற்படவைப்பது என்பது இயலாத ஒன்று. இன்றையநிலையில் பாரிய சேதமடைந்த இந்நிறுவனங்களை செயற்பட வைக்க பல வருடங்கள் செல்லலாம்.

### நடுத்தரக் கைத்தொழில்கள்

யாழ்ப்பாணக் கைத்தொழிலைப் பொறுத்தவரை நடுத்தரக் கைத்தொழில்கள் முக்கிய இடத்தினை வகிக்கின்றன. அரசினாலும், அதிகளவு தனியாரினாலும் இக்கைத்தொழில்கள் மேற்கொள்ளப் படுகின்றன. இக்கைத்தொழில்களுக்கு உதாரணங்களாக, அலுமினியத் தொழிற்சாலை, கண்ணாடித் தொழிற்சாலை, மின்சார நெசவாலைகள், அச்சுவேலி தொழிற்பேட்டை, அஸ்பெஸ்ரஸ் தொழிற்சாலை போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கூற முடியும்.

ஆரம்ப காலங்களில் இக்கைத்தொழில்கள் சிறப்பாக இயங்கியும் வளர்ச்சியடைந்தும் வந்தன. ஆயினும், 1990 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இக்கைத்தொழில்கள் பல மூடப்பட்டதோடு ஒரு சில நிறுவனங்கள் பல கஷ்டங்களுக்கு மத்தியில் வரையறுக்கப்பட்ட அளவிலேயே இயங்கி வருகின்றன. இந்நிலைமைகளினால் இந்த நிறுவனங்களில் வேலைசெய்த பலரும் வேலையிழந்தனர். இதைவிட இந்நிறுவனங்களின் மூலம் மறைமுக வேலைவாய்ப்பைப் பெற்ற பலரும் வேலை இழந்தனர். இது வேலையில்லாத் திண்டாட்டத்தை மேலும் அதிகரித்தது.

அத்துடன், இவர்கள் வேறு வேலை வாய்ப்புக்களைத் தேடிக்கொள்வதற்கான மார்க்கங்களும் இல்லாத நிலை காணப்படுகின்றது.

ஏனெனில், யாழ். குடாநாட்டில் அனைத்துத் துறைகளுமே பாதிப்புக்குட்பட்டு நிற்கின்றன. இந்நடுத்தரக் கைத்தொழில்கள் வெளியூர் மூலப்பொருட்களில் தங்கியிருத்தல், போக்குவரத்துச் சீரின்மையால் மூலப்பொருட்களை எடுத்து வருவதில் ஏற்படும் காலதாமதம், சந்தை வாய்ப்புக்கள் இன்மை, வெளியிடப் பொருட்களுடனான அதிகரித்த போட்டி என்பன இவை எதிர்நோக்கும் பிரச்சினைகள்.

இதனால் இன்றுள்ள நிலையில் சீரான போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்தல். மூலப் பொருட்கள் தங்குதடையின்றி கிடைக்க வழிசெய்தல், வெளியிடப் போட்டிப் பொருட்கள் மீதான தடை அல்லது கட்டுப்பாடுகள் என்பன இக்கைத்தொழில்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு ஓரளவேனும் தீர்வினைக் கண்டுகொள்ள உதவும்.

### சிறிய கைத்தொழில்கள்

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை அதிகளவு காணப்படும் கைத்தொழில் இந்தச் சிறிய கைத்தொழிலே ஆகும். உணவு பதப்படுத்தல், கல்லுடைத்தல், உலோகப் பட்டறைகள், பால் உற்பத்திப் பொருட்கள், மின்தொழில், தென்னைசார் உற்பத்திகள், பனைசார் உற்பத்திகள், எண்ணெய் உற்பத்தி, உப்பு உற்பத்திப் பொருட்கள், வடிசாலைகள், விவசாய சேவைகள் போன்றவற்றை இதற்குள் அடக்கிக்கொள்ளலாம்.

இக்கைத்தொழில் அதிகளவு தனியாராலும், கூட்டுறவுத்துறை அமைப்புக்களாலும் மேற்கொள்ளப்படுகின்றது. பாரிய, நடுத்தரக் கைத்தொழில்கள் பாதிப்புக்குள்ளான காலப்பகுதிகளில் இந்த கைத்தொழில் பாதிப்படையவில்லை. ஏனெனில் இவை உள்ளூர் மூலப்பொருட்களுடனும் குறைந்தளவு தொழில்நுட்பத்துடனும் இயங்கி வந்தன.

மேலும், இவை உள்ளூச் சந்தையை மையமாக வைத்தே உற்பத்தியை மேற்கொண்டன. ஆயினும், யாழ்ப்பாண இடப்பெயர்வினை அடுத்தும் பின் வந்த காலங்களிலும் இக்கைத்தொழில் பல நெருக்கடிகளை எதிர்கொண்டது.

இப்பொழுதும்கூட இந்த நெருக்கடிகளில் இருந்து இவை விடுபட்டதாகத் தெரிய வில்லை. ஏனெனில் பலவிதமான கட்டுப்பாடுகள், உள்ளூர் போக்குவரத்தில் ஏற்படுத்தப்படும் தடங்கல்கள், பாதிப்படைந்தவர்களுக்கான நட்டஈடு வழங்கப்படாமை, சந்தைப்படுத்தல் வசதிகள் குறைவாக உள்ளமை போன்ற காரணங்களைக் குறிப்பிட்டுக் கூறமுடியும்.

இயேசுநாயகம் ஜெயசுதன்

எனவே, இக்கைத்தொழிலை மீண்டும் வளர்த்தெடுக்க அழிந்த, பாதிப்படைந்த சொத்துக்களுக்கு நியாயமான நட்டஈடு வழங்குதல், கொள்வனவுச் சலுகைகள் வழங்குதல், கடன்திட்டங்களை அறிமுகப்படுத்தல், நவீன உபகரணங்கள் மற்றும் மூலப் பொருட்கள் கிடைக்க வழிசெய்தல், சந்தைப்படுத்தல் வசதிகள், இலகுவான போக்குவரத்து வசதி, வெளியூர்ப் பொருட்கள் மீதான கட்டுப்பாடுகள் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்.

### குடிசைக் கைத்தொழில்கள்

யாழ்ப்பாணத்தில் நெடுங்காலம் தொட்டுக் காணப்படும் கைத்தொழில்கள் குடிசைக் கைத்தொழில்கள் ஆகும். குடிசைக் கைத்தொழில்கள் யாழ்ப்பாணத்தில் பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குடிசைக் கைத்தொழில்களாக உணவு உற்பத்தி, மட்பாத்திரம் செய்தல், கருவாட்டு உற்பத்தி, கைத்தறிநெசவு, தென்னைசார் உற்பத்திப் பொருட்கள், பனைசார் உற்பத்திப் பொருட்கள் போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

சாதாரணமாகப் போதிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்கள் வீண்பொழுது போக்காமல் சொற்ப வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்காகத் தங்களை இத்தகைய தொழில்களில் ஈடுபடுத்திக்கொள்வர்.

ஆயினும் - அண்மைக்காலத்தில் இக்கைத்தொழில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் மிகவும் சீரானநிலையிலே இயங்கிக்கொண்டிருக்கின்றது.

(அடுத்த வாரம் தொடரும்)

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சாவகச்சேரி | நெல்லியடி | சுன்னாகம் | ஊர்காவற்றுறை |
|---|---|---|---|---|
| பயிற்றை | 40/- | 70/- | 75/- | 80/- |
| உருளைக்கிழங்கு | 70/- | 80/- | 80/- | 80/- |
| கத்தரிக்காய் | 60/- | 70/- | 60/- | 80/- |
| பாகற்காய் | 60/- | * | 75/- | 100/- |
| வெண்டிக்காய் | 30/- | 30/- | 40/- | 80/- |
| கரட் | 50/- | 40/- | 50/- | 50/- |
| பீற்றூட் | 40/- | 40/- | * | 80/- |
| வெங்காயம் | 30/- | 60/- | 40/- | 40/- |
| பச்சைமிளகாய் | 60/- | 40/- | 80/- | 70/- |

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

செருவந்த போழ்தில் சிறைசெய்யா வேந்தை
வெருவந்து வெய்துகெடும்.

- திருக்குறள்

# நமது நோக்கு

## விழிப்பார்களா? விழுவார்களா?

அமைதி முயற்சிகளுக்கு எதிராக பௌத்த பிக்குகள் மற்றுமொரு ஆர்ப்பாட்டமொன்றை கொழும்பில் நடாத்தியுள்ளனர்.

நாடு பிரிவுபடுவதைத் தடுக்கவேண்டுமெனவும், அதற்காக பிக்குகள் உயிர்த்தியாகம் செய்யத் தயாராக இருக்கவேண்டும் என்றும் - அங்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பேச்சுவார்த்தை என்ற போர்வையில் - விடுதலைப் புலிகள் தனி அரசாங்கத்துக்கான தயாரிப்புக்களில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஏராளமான பௌத்த பிக்குகள் அணிதிரள, நடந்திருக்கும் இந்த எதிர்ப்புக் கூட்டத்தில் உரையாற்றியோரின் கருத்துக்களும், அவை சொல்லப்பட்ட உணர்ச்சி வேகமும் - இலகுவில் புறந்தள்ளப்படக் கூடியனவல்ல.

அதேவேளை - தனியே ஒரு அமைப்பாக மட்டுமல்லாது, பல்வேறு பௌத்த மத அமைப்புக்களும் இணைந்தே இந்த எதிர்ப்புக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்ததும் குறிப்பிடத்தக்கதாகிறது.

சமாதானப் பேச்சுகள் ஆரம்பித்ததற்குப் பின்னர் - தென்னிலங்கையில் பேரினவாதச் சிந்தனை மிக்க அரசியல் கட்சிகளால் வெளியிடப்பட்டுவந்த - அமைதிக்கு எதிரான கருத்துக்கள் தற்போது தனித்து பௌத்த மத அமைப்புக்களால் நடாத்தப்படும் எதிர்ப்புக் கூட்டங்களாக தீவிரம் பெறுவதானது - பௌத்த சிங்களப் பேரினவாதம் - சமாதானத்திற்கான முயற்சிகளை இலகுவில் உள்வாங்கிவிடப் போவதில்லை என்பதை உணர்த்தி நிற்கிறது.

தென்னிலங்கையில் எளிதில் தீப்பற்றிக் கொள்ளக் கூடிய வகையில் - சிங்கள பௌத்த பேரினவாதத்தின் பேரில் தூண்டப்படும் இந்த விஷமத்தனமான வெளிப்பாடுகளுக்கு - மக்கள் மத்தியில் தற்போதைக்கு பெரியளவில் பிரதிபலிப்புக்கள் தென்படாத போதும் - மெல்ல மெல்ல ஊடுருவும் விஷம் போலான இத்தகைய பிரசாரத்தின் பாதிப்புப் பற்றி வாளாவிருந்துவிட முடியாது.

இதன் இன்னொரு பரிமாணமாக கடந்த ஒரு வருடகாலமாக நீடித்துவரும் அமைதி முயற்சிகளால் குறிப்பிடத்தகுந்த விளைவுகள் எதுவும் பெறப்படாத நிலையிலேயே எழும் இக்குரல்கள் - உறுதியான தீர்மானங்களை நோக்கி இரண்டு தரப்பும் நகரும்போது - எதிர்விளைவை எவ்வாறு வெளிக்காட்டுமென்பதும் கவனத்திற்குரியதே.

பௌத்த சிங்களப் பேரினவாதமானது - தாயகம் மீட்கும் பிக்குகள் முன்னணியெனவும், வேறு பல அமைப்புக்களாகவும் - அரசியல் மயப்படுத்தப்பட்ட நிறுவனங்களாக வளர்ந்துள்ள நிலையில் - இவற்றுக்கான அரசியல் பின்புலங்களின் செல்வாக்கும் இந்த விடயத்தில் ஆராயத்தக்கதாகின்றது.

ஏற்கனவே - நோர்வேத் தூதுவர் வெஸ்பேர்க்கை நாட்டைவிட்டு வெளியேற்றவேண்டுமென கொழும்பில் வைத்து அந்நாட்டின் தேசியக்கொடியை எரித்தார்கள்.

தற்போது, உயர்பாதுகாப்பு வலயத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்துள்ளனர். விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் களையப்பட்டாலேயே - உயர்பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படல் வேண்டும் என நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில் பௌத்த பிக்குகளால் தீர்மானமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தவகையில் - அரசியல், அதிகார ஆசீர்வாதத்துடன் முன்னெடுக்கப்பட்டுள்ள, பௌத்த பிக்குகளின் இந்த எதிர்ப்பு - நாளைய சமாதானப் பேச்சுக்களில் இணக்கம் காணப்படும் ஒவ்வொரு விடயத்திற்குமான ஆர்ப்பாட்டமாக உருவாகவும் வாய்ப்புண்டு.

இவ்வாறான ஒரு சூழல் - ஒன்றில், இத்தகைய அமைப்புக்களின் உண்மைத் தோற்றத்தை சிங்கள மக்களிடம் தோலுரித்துக் காட்டப் பயன்படலாம். அதாவது - எதற்கெடுத்ததற்குமான எதிர்ப்புக்கள் இத்தகைய அமைப்புக்களின் சமாதானத்தைச் சீர்குலைக்கும் இலக்குகளை வெளிக்காட்டலாம்.

அல்லது - மாறாக, பேரினவாதத்தின் உணர்வலைகளை பரந்துபடவும், பலமுடையதாகவும் உருவாக்கலாம்.

இந்த இரண்டிலும், சிங்கள மக்கள் எவ்வழியில் செல்லப் போகின்றனர் என்பதைப் பொறுத்தே அமைதியின் எதிர்காலமும் அமையப்போகிறது.

இதன்வழியே - நிரந்தர அமைதியும் சமாதானமும் வேண்டுமெனில், சிங்களமக்கள் இந்தப் பிரசாரங்களுக்கு வெளிக்காட்டும் எதிர்வினைகளின் அடிப்படையே - இதற்குத் தீர்வாகவும் அமையும்.

# புலிகளின் பலம் 16 ஆயிரத்திலிருந்து இரு வருடங்களில் 30 ஆயிரமாகுமாம்

## இராணுவப் புலனாய்வுத் துறையை ஆதாரங்காட்டி இணையத்தளம் தகவல்

(கொழும்பு)

புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்த பின்னர் புலிகள் புதிதாக 7 ஆயிரத்து 763 பேரைத் தமது படையில் இணைத்துள்ளதாக இராணுவப்புலனாய்வுத்துறை தெரிவித்திருப்பதாக ஜே.வி.பி. சார்பு இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

இதன் மூலம் 16 ஆயிரமாகப் புலிகள் தமது ஆளணியை உயர்த்தியுள்ளனர். இதேபோக்கில் போனால் இன்னமும் இரண்டு வருடங்களில் தமது ஆளணியை 25 சதவீதத்தால் அதிகரித்து - மொத்த ஆளணியை 30 ஆயிரமாக உயர்த்திக் கொள்ளுவார்கள்.

இத்துடன் புலிகள் தமது ஆயுதவளத்தையும் பெருக்கி வருகின்றனர். புரிந்துணர்வு உடன்பாட்டுக்குப்பின்னர் ஆறு கப்பல்களில் புலிகள் ஆயுதங்களைக் கொண்டு வந்திருப்பதாகவும் இராணுவப் புலனாய்வுத்துறையை ஆதாரம் காட்டி இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

## பலாலி விமானத் தள ஓடுபாதை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கு விமான சேவைகளை ஆரம்பிப்பது பற்றி சிறிலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனம் பரிசீலித்து வருகிறது.

இதற்காக பலாலி விமானநிலையத்தின் ஓடுபாதையை அபிவிருத்தி செய்வது பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக எயர்லைன்ஸ் நிறுவனத்தின் தலைவர் தயா கல்பொல தெரிவித்தார்.

கடந்த 13 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றிலே உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமாதான முயற்சிகள் காரணமாக வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்திருக்கின்றது என்றும் அவர் கூறினார்.

## நெல்லியடியில் பாதிப்புற்றோருக்கு நட்ட ஈடு வழங்க இணக்கம்

(கொழும்பு)

நெல்லியடி மறியற்போராட்டம் நடைபெற்றபோது பொலிஸாரின் தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்த சகலருக்கும் நஷ்டஈடு வழங்குமாறு - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

உள்துறை அமைச்சின் செயலாளர் எம்.என். ஜுனைட்டுக்கு இந்த உத்தரவு நேற்றுமுன்தினம் பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை - களுவாஞ்சிக்குடி, திருகோணமலை பகுதிகளில் நடந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் பலியான, காயமடைந்தோருக்கும் நஷ்டஈடு வழங்குவது தொடர்பான பணிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளார்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்று முன்தினம் நடாத்திய சந்திப்பில் இதற்கான சம்மதம் தெரிவிக்கப்பட்டது.

# கோபி அனானின் இலங்கை விஜயம் செய்தி வெளியிட்டது முறையல்ல!

## இலங்கை அரசு மீது கண்டனம்

(கொழும்பு)

ஐ.நா. செயலாளர் கோபி அனானின் இலங்கை விஜயம் குறித்து திகதி தீர்மானிக்கப்படுவதற்கு முன்னரே, இது தொடர்பான தகவல்களை அரசு பிரசாரம் செய்தது தொடர்பாக, ஐ.நா.செயலாளரின் அலுவலகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஐ.நா. பொதுச்செயலாளர் கோபி அனானின் உதவியாளரைச் சந்தித்த ஐ.நாவுக்கான இலங்கைத் தூதுவர் சார்லி மகேந்திரனிடம் ஐ.நா செயலாளர் கோபி அனான் இலங்கை வருவதற்கான விருப்பம் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், இவ்விஜயத்திற்கான திகதி தீர்மானிக்கப்படுவதற்கு முன்னரே, கோபி அனான் இலங்கைக்கு வரப்போவதாக அரசாங்கம் பிரசாரம் செய்துவிட்டது.

இது இராஜதந்திர ரீதியில் முறையான செயல் அல்ல என்று கோபி அனானின் செயலக வட்டாரங்கள் இலங்கை அரசாங்கத்தின் மீது கண்டனம் வெளியிட்டுள்ளன.

# மீள்குடியமர்வுக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபா வழங்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

கடந்தகால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து அண்மையில் மீண்டும் தமது சொந்த இடங்களில் குடியமர்ந்த சுமார் ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு உடனடியாக தலா இருபத்தையாயிரம் ரூபாவீதம் வழங்கப்படவுள்ளது.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற இடம் பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பான விசேட கூட்டத்தில் இவ்விடயம் குறித்தும் ஆராயப்பட்டது.

இக்குடும்பங்களுக்கான மேற்படி கொடுப்பனவுகளை வழங்குவதற்குத் தேவையான நிதி தற்போது கைவசம் இருப்பதாகவும், எனவே இக்கொடுப்பனவிற்கான பணிகளை துரிதமாக மேற்கொள்ளலாம் என்றும் அங்கு கருத்து தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாகப் பிரதம மந்திரியின் செயலகத்தைச் சேர்ந்த டாக்டர் ஏ.எஸ்.குணசிங்கம் கருத்துத் தெரிவிக்கும்போது, இக்கொடுப்பனவுகளை மாவட்ட அரச செயலகங்களும், நிக்கொட் அமைப்பும் இணைந்து மேற்கொள்ள இருக்கின்றன. இதற்கான பணிப்புரைகள் வட- கிழக்கிலுள்ள அனைத்து அரச செயலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளன என்றார்.

(க,லி)

## கொட்டகதெனிய மீதும் ஆயுதக் கிடங்கு விசாரணை

அத்துருகிரிய மிலேனியம் சிற்றி ஆயுதக்கிடங்கு சம்பந்ததாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கொட்டகதெனியவையும் விசாரிக்கவுள்ளது.

அத்துடன், இக்குழு இராணுவ அதிகாரிகளின் வாக்கு மூலங்களைப் பெற்றதுடன், இதுவரை ஏழு அதிகாரிகளை விசாரித்ததாகவும் தெரியவருகின்றது.

ஆயுதக்கிடங்கைப் பேணிவந்த உளவுப்பிரிவின் அதிகாரிகளும் விசாரிக்கப்பட இருக்கின்றார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி விசாரணைக்குழுவுக்கு ஓய்வுபெற்ற நீதியரசர் ஜயவிக்கிரம தலைமைதாங்குகிறார்.

## யாழ்.மாநகரமேயரின் போராட்டம் அறியாமையைக் காட்டுகிறது

### இந்துசமய விவகார அமைச்சு அறிக்கை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு பிரதிமேயர் பிரசன்ன குணவர்த்தன மற்றும் கொழும்பு மாநகரசபை நிபுணர்களை யாழ்ப்பாணம் அழைத்து வந்து கரையோரப்பகுதிகளைப் பார்வையிட வைத்து அவற்றின் சுகாதாரச் சீர்கேடுகளைக் களையவே அமைச்சர் மகேஸ்வரன் நடவடிக்கை எடுத்தார். ஆனால், யாழ்.மாநகர மேயரும் வேறு சிலரும் இந்நடவடிக்கையை விமர்சித்திருப்பது அவர்களின் அறியாமையையே வெளிப்படுத்துகின்றது என இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு விடுத்த ஊடக அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இத்தகைய சுகாதாரச் சீர்கேடுகளைக் கவனியாது இதுவரை யாழ்.மாநகரசபை பாராமுகமாக இருந்துள்ளது. அமைச்சருக்கு எதிரான இத்தகைய கேலிக்கூத்துப் போராட்டங்களை இனிமேலாவது நிறுத்துமாறு அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர முதல்வருக்கு அறிவிக்காது, கொழும்பு பிரதிமேயர் மற்றும் அதிகாரிகளை அமைச்சர் மகேஸ்வரன் கடந்த ஞாயிறன்று அழைத்துவந்து நகரின் கரையோரப்பகுதிகளைப் பார்வையிடச்செய்தமை, யாழ்.மாநகர முதல்வரை அவமதிக்கும் செயல் எனக்கூறி, நேற்றுமுன்தினம் யாழ்.மாநகரசபையில் மேயர் கந்தையன் தலைமையில் கறுப்புப்பட்டி போராட்டம் நடைபெற்றது தெரிந்ததே.

# சமஷ்டியும் சிங்களத் தலைமைகளும் டி.எஸ்.சேனநாயக்க முதல் ரணில் வரை

**சென்றவாரத் தொடர்ச்சி...**

அ.அமிர்தலிங்கம், வி.என்.நவ ரத்தினம், க.துரைரத்தினம், க.பொ. ரத்தினம் ஆகியோர் மீதான தேசத் துரோகக் குற்றச்சாட்டு வழக்கில் செல்வநாயகம் தலைமையில் ஜி.ஜி.பொன்னம்பலம், மு.திருச் செல்வம், வி.எஸ்.ஏ.நந்தநாயகம் ஆகியோர் தோற்றி வாதாடினார். இவர்களைத் தவிர நூற்றுக்கு மேற் பட்ட வழக்குரைஞர்களும் இவ்வழக் கில் பிரதிவாதிகள் சார்பில் தோற் றினர்.


சிறிமாவோ

இச்சட்டத்தை பிறப்பித்த அவ சரகாலச் சட்டமே செல்லாது என்று ட்ரயல் நீதிமன்றம் தீர்ப்பளித்து பிரதி வாதிகள் நால்வரையும் விடுதலை செய்தது.

இந்நிலையில் தமிழ்க் கட்சிக ளுக்கிடையில் ஒற்றுமையை ஏற்ப டுத்தி அடுத்தென்ன நடவடிக்கை எடுப்பது என்று தமிழ்த் தலைவர் களும் பிரமுகர்களும் கலந்துரை யாடலில் ஈடுபட்டனர்.

இனப்பிரச்சினைக்குப் பேச்சு வார்த்தை மூலம் சுமுகமான தீர்வு காணலாம் என்ற நம்பிக்கை இழக் கும் நிலை ஏற்பட்டுவிட்டது. செல் லையா குமாரசூரியர் மூலம் தமி ழர் பிரச்சினைக்கு முடிவு காண லாம் என்று சிறிமா அரசு முயற்சி செய்தது.



என்றும் மறக்கமுடியாத தமிழராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள்

இதற்கிடையில் யாழ்ப்பாணத் தில் நான்காவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை நடத் துவதற்கு தமிழ் ஆராய்ச்சிக் கழக இலங்கைக்கிளை முடிவு செய்தது. இதற்குத் தமிழாராய்ச்சிக் கழக கிளைக குழுக்குள்ளும் பிரிவேற்பட் டது. அரசாங்கமும் அதற்கு ஆட் சேபம் தெரிவித்தது. வெளிநாட்டுத் தமிழறிஞர்கள் யாழ்ப்பாணம் வருவ தற்கு முட்டுக்கட்டை போட்டது.

இறுதியில் மிகக் கோலாகல மாக யாழ்ப்பாணத்தில் நான்கா வது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றது. இறுதிநாள் நிகழ்ச் சியில் பொலிஸார் அத்துமீறி நடந்து ஒன்பது அப்பாவிகளை உயிர்ப்பலி வாங்கினர்.

செல்வநாயகம் அரசாங்கத்திற் குச் சவால் விடுத்து பதவி துறந்த காங்கேசன்துறைத் தொகுதிக்கு புதிய பிரதிநிதி ஒருவரைத் தெரிவு செய்வதற்காக 1975 ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் உப தேர்தல் நடக் கும் என அறிவிக்கப்பட்டது. இலங் கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த உறுப்பினரும் யாழ்ப்பாணத் தில் ஒரு பிரமுகருமான வி.பொன் னம்பலம், ஆளும் கட்சி சார்பில் செல் வநாயகத்தை எதிர்த்துப் போட்டி யிட்டார். அமைச்சர் குமார சூரிய ரும் ஆளும் கட்சியினரும் தமது சகல வளங்களையும் பயன்படுத்தி தீவிர பிரசாரம் செய்தனர்.

தேர்தலில் செல்வநாயகம் மிகப் பெரும்பான்மையான வாக்குகளால் வெற்றி பெற்றார். ஆனாலும், அர சாங்கம் தமிழர் பிரச்சினைக்கு சுமு கமான தீர்வுகாண முன்வர வில்லை. தமிழ் மக்களுக்கு எதி ரான அடக்குமுறை நடவடிக்கை களே அதிகரித்தன. புதிய அர சியல் யாப்புக்கும் பரீட்சையில் தமிழ் மாணவர்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தரப்படுத்தல் முறைக்கும் எதிர்ப்புத் தெரிவித்த இளைஞர்கள் கைது செய்யப்பட் டனர். கைது செய்யப்பட்டவர்கள் சித்திரவதைக்குள்ளானார்கள்.

தமிழ் கட்சிகளுக்கிடையில் ஒற் றுமை ஏற்படுத்தப்பட்டது. இதன் முதற்கட்டம் வட்டுக்கோட்டைப் தொகுதியில் பண்ணாகம் என்ற இடத்தில் நடந்தது. இதில் தொண் டமான், ஜி.ஜி.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் ஆகிய மூவரும் தமிழர் ஐக்கிய முன்ன ணியின் இணைத் தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். இது 1976 ஆம் ஆண்டில் நடந்தது.



செல்வநாயகம்

இதுவரை இணைப்பாட்சி என்ற சமஷ்டி அமைப்பு மூலமே இலங் கையில் தமிழ் மக்கள் உரிமை யுடன் கௌரவமாக வாழலாமென்று கூறிவந்த தலைவர்கள், இக் கூட் டத்தில் அதைக் கைவிட்டனர். தமிழ மக்கள் முன்னர் இழந்த தமி ழீழ அரசை மீண்டும் அமைக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேறியது.

இதேசமயம், நாடாளுமன்றத் திலும், இழந்த தமிழீழ அரசை தமிழ்மக்கள் மீள அமைப்பதற்கு இச்சபை ஒப்புதல் அளிக்கிறது என்ற பிரேரணைக்கு தமிழர் கூட்டணியி னர் முன்னறிவித்தல் கொடுத்தனர்.

இது சபையின் ஒழுங்குப் பத்தி ரத்திலும் இடம்பெற்றிருந்தது. இது விவாதத்திற்கு எடுக்கப்படாமலே நாடாளுமன்றத்தின் ஆயுள் முடிந் தது.

1977 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப் பட்டது. தேர்தலும் உரிய நேரத் தில் நடந்தது. பல வருடங்களாக ஆட்சிப் பீடத்திற்கு வருவதற்கு காத திருந்த ஜே.ஆர். தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி, பெரும் வெற்றி பெற்றது.


ஜே.ஆர்.

தேர்தல் முடிவுகள் முற்றாக வெளிவருவதற்கு முன்னரே யாழ்ப் பாணத்தில் நடந்து கொண்டிருந்த ஒரு கல்லூரிக் களியாட்ட விழாவில் பொலிஸார் குழப்பம் செய்து கல கத்தைத் தொடக்கி வைத்தார்கள். இக்கலகம் நாடுமுழுவதும் தமிழ் மக்களுக்கு எதிரான இனக்கலக மாக விரிவடைந்தது.

தமிழ் மக்கள் தென்னிலங்கை யில் உயிர், உடைமை இழந்து அநா தைகளாக, அகதிகளாகக் கப்பல் களில தமது தாயகமான வடக் குக்கும் கிழக்கிற்கும் திரும்பினர். நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமர் ஜே.ஆர். - 'சமாதானம் என்றால் சமா தானம், போர் என்றால் போர்' என்று சவால் விடுத்தார். தமிழர்களுக்கு எதிராகக் கலகம் மேலும் பரவியது!

1974 ஆம் ஆண்டிலேயே தமிழ் மக்கள் அஹிம்சை வழியில் போராடி வெற்றி பெறமுடியாது என்ற கருத்து தமிழ் இளைஞர் மத்தியில் தோன்றி யது. சில இளைஞர்கள் இந்தியா சென்றனர். அங்கு சில உதவிக ளும் பெற்றனர்.

1977 ஆம் ஆண்டு இனக்கலகத் தைத் தொடர்ந்து தமிழ் இளை ஞர்கள் இனி ஆயுதம் ஏந்திப் போரா டுவதைத் தவிர வேறுவழியில்லை என்ற முடிவுக்கு வந்தனர். ஆயுதம் ஏந்தினர். சிலர் திசைமாறிச் சென் றனர்.

இன்று வலிமையோடு உள்ள தமிழ் தலைமையோடு மூன்றாந் தரத்தின் அனுசரணையுடன் வெளி நாடுகளில் இலங்கை இனப் பிரச் சினைக்கு நல்ல தீர்வு காண்ப தற்குப் பேச்சுவார்த்தை நடைபெற் றுக் கொண்டு இருக்கின்றது.

தந்தை செல்வநாயம் ஐம்பத் தொரு ஆண்டுகளுக்கு முன் "வாழு, வாழவிடு" என்ற தாரக மந்திரத் துடன் முன்வைத்த சமஷ்டி ஆட்சி அமைப்பின் மூலம் இனப் பிரச்சி னைக்குத் தீர்வு என்ற யோசனை இப்போது பரிசீலனை செய்யப்படு கின்றது.

ராஜாஜி, இதே சமஷ்டி யோச னையை 1958 ஆம் ஆண்டிலேயே கூறியிருந்தார். இந்தியா இன்னமும் இதுபற்றித் தானும் குழப்பம டைந்து மற்றவர்களையும் குழப்பிக் கொண்டிருக்கின்றது. இப்போது எல்லோருக்கும் உரிமை வேண்டு மென்று இந்தியாவும் பல்லவி பாடு கின்றது. முன்பு தமிழ் மக்களுக்கு உரிமை மறுக்கப்பட்டு இன ஒழிப்பு நடவடிக்கைகள் மேற் கொண்டபோது இந்தியா என்ன செய்தது? எங்கே போனது?

இப்பொழுதும் காலம் கடந்து விடவில்லை. இணைப்பாட்சி என்ற சமஷ்டி அமைப்பின் மூலம் இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணத் தவறினால் இப்பிராந்தியத்திலேயே அமைதியை எதிர்பார்க்க முடியா மல் போகலாம்.

**எஸ்.எம்.ஜி.**

---

நேசன்

## எங்கே போகிறோம்...?

# சினிமாவும் நம்மவர்களும்

திரைப்படங்கள் மிகச்சிறந்த கட்புலக் கலைச்சாதனங்கள். ஒரு சிறந்த கருத்தை அல்லது ஒரு உயர்ந்த கலையனுபவத்தை நல்லதொரு உணர்வுப் பகிர்தலை வேறெந்தக் கலைச்சாதனத்தினூடாக மேற்கொள்வதைக் காட்டிலும் திரைப்படமொன்றினூடாக மிக வெற்றிகரமாகவும் நிறைவாகவும் செய்ய முடியும். ஒரு நாவல், ஒரு சிறுகதை, ஒரு கவிதை இவை எதுவுமே ஒரு திரைப்படம்போல பரவலாகவும் குறுகிய நேரத்திலும் ஒரு ரசிகனைத தீண்டும் ரசாயனத்தை நிகழ்த்த முடியாது. விசேடமாக மேற்சொன்ன கலைவடி வங்களில் ஈடுபாடு கொண்டவர்களிடம் மட்டுமே அந்தக் கலைவடிவம் தனக்குரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும். அந்தவகையில் ஒரே தடவையில் பெரும் எண்ணிக்கையானவர்களை ஓர் இடத்தில் அமர்ந்திருக்க வைத்து - 'இதைப் பாருங்கள்- இது தரும் அனுபவத்தையும் ஒரு தரம் பெற்றுச் செல்லுங்கள்' என அவர்களின் ரசனையைக் கவரவல்ல ஊடகங்கள் திரைப்படங்களாகும். இத்தகைய திரைப்படங்களைக் காண நாம் அக லத்திரை கொண்ட திரையரங்குகளை நாடிச் செல்லும் தேவையும் இன் றில்லை. ஒருகாலத்தில் திரைப்படமொன்றைக் காண்பதற்காக வெளிக்கிட்டுப் பயணம் செய்து, வரிசையில் காத்திருந்த - 'சடங்குகள்' இன்று எமது பிரதேசத்தில் அவசியமில்லாதவையாகிவிட்டன. 'வீடியோ' வடிவத்தில் அவை இன்று நம் வீடுகளுக்குள் வெகு சுதந்திரமாக நுழைகின்ற வசதி ஏற்பட்டுள்ள காலம் இது.

பரவலாக இன்று எல்லோருமே இத்தகைய சினிமாக்களை வெகு தாரா ளமாகப் பார்க்கிறார்கள். அவ்வாறு அவர்கள் காணுகின்ற சினிமாக்கள் சமூகத்துக்கும் பயனளிக்கின்ற நல்ல விளைவுகளை - அனுபவத்தைத் தருகின்றனவா? என்று பார்ப்போமானால் - ஏமாற்றம்தான் கிடைக்கிறது.

துரதிஷ்டவசமாக எங்களுடைய இலக்கியம் என்று நாம் பேசிக் கொள் ளுகிற அளவுக்கு- கொண்டாடுகிற அளவுக்கு எங்களுடைய சினிமா என்று சொல்லிக்கொள்ள இயலாதவர்களாக இருக்கிறோம். தென்னிந்தியத் தமிழ்த் திரைப்படங்களையே நாமும் எம்முடையதெனப் 'பாவித்துக்' கொண்டிருக் கிறோம். தென்னிந்தியத் திரைப்படங்களோ அந்த மண்ணின் திரைப்பட வியாபாரிகள் பணம் பண்ணுவதற்கு மேற்கொள்ளுகின்ற மலிவான உத்திகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

காற்றில் அள்ளுண்டு வருகின்ற குப்பை கூழங்கள்போல இன்று இத்த கைய 'திரைக்கழிவுகள்', வீடியோ வடிவத்தில் எம்மவர்களை வந்தடைந்து அவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் - பொழுது கழிக்க உதவும் - பிரமிப்பில் மூழ்க வைக்க முனையும் - கனவுகளில் அமிழ்த்தி வைக்க எத்தனிக்கும் காரி யங்களை வெகு நேர்த்தியாகச் செய்து கொண்டிருக்கின்றன.

சாதாரணமாக மனித வாழ்க்கை எப்படியெல்லாம் இல்லையோ, எப்படி யெல்லாம் அமைந்துவிட முடியாதோ அப்படியெல்லாம் இருப்பதாகக் காட் டப்படும் வெறும் கற்பனைப் போலிகளே இன்றைய பெருமபாலான திரைப் படங்கள். எமது ரசிகர்கள் அவற்றை ஆகா! ஓகோ! என்று ரசிக்கிறார்கள். அந்தத் திரையுலகப் பொய்மைகளைப் பார்த்து - தாமும் அதுபோலப் பாவித்து..... ஏதோவாகி எங்கேயோ போய்க்கொண்டிருக்கிறார்கள்.

திரைப்படம் என்கிற ஊடகம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு மக்களை ஏதோ ஒரு லாகிரியில் அமிழ்த்தி வைத்திருக்கிறது. பாவம் அந்த மண்ணின் மக்கள்! சரி, தென்னிந்திய ரசிகர்களுக்குத்தான் அப்படி ஒரு தலைவிதி என்றால் அதேசோதனைகள் நம்மவர்களுக்கும் வேண்டுமா?

நமது வாழ்க்கையைச் சொல்லுகிற- நமது கதையை எடுத்துக் காட்டுகிற நல்ல படைப்புகளை நாம் இங்கு உருவாக்கக்கூடாதா?

உருவாக்கலாம்- உருவாக்க முடியும் - உருவாகின்றன! - இதுதான் மிகமிகத் திருப்தி தருகின்ற ஒரு விஷயம்.

அண்மைக்கால மாறுதல்கள் பலவற்றுக்குப் பிறகு நிதர்சனத்தினரால் உருவாக்கப்பட்டு இன்று பரவலாக நம்மவர் மத்தியில் காட்டப்பட்டு வருகின்ற 'கடலோரக் காற்று' நமது சொந்தப்படைப்பு. அதை உருவாக்கி உலவ விட்டிருக்கும் கேசவராஜன் என்கிற கலைஞரை நாம் மனதாரப் பாராட்ட வேண்டும்.

நமது மண்ணில் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற நிஜமான விஷயங்களை வைத்து, அவற்றின் இயல் வாய்மைத்தன்மை கெடாமல் ஒரு திரைப்படைப் பாக உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

எமது கடலோரக் கிராமமொன்றின் வாழ்க்கைத் தன்மைகள் திரைப்பட மாக்கப்பட்டிருக்கின்றன.

மிகவும் சொற்பமாக நம்மிடம் உள்ள வளங்களை வைத்துக்கொணடு இப்படியொரு படைப்பைத் தந்திருப்பது திருப்தியைத் தருகின்றது.

திரைப்படங்களாகப் பெரும்பாலும் பொய்களையே கண்டு ரசித்து வந்தவர் களுக்கு இது ஒரு வேறுபட்ட அனுபவத்தைத் தரும். இதைக் காணச்செல்லும் ரசிகர்களுக்கு ஒரு வேண்டுகோள். வழக்கமான சினிமா தரும் சந்தோஷங் களை எதிர்பார்த்து இதனைக் காணச்செல்லாதீர்கள் - உங்கள் சொந்த மண்ணின் வாழ்க்கையைச் சொல்லும் ஒரு படைப்பு என்ற உணர்வோடு - எங்களின் சொந்தத் தயாரிப்பு என்ற பிடிப்போடு- உரிமை உணர்வோடு பாருங்கள்.

- இதில் குறைபாடுகளே இல்லை என்று சொல்ல வரவில்லை. குறைபாடு உண்டு- ஆனாலும் நிறைவுகள் அதிகமுண்டு.

ஒலியமைப்பில் இன்னமும் கவனம் செலுத்தப்பட வேண்டும். உரையா டல்கள் இன்னும் இயல்பாக அமையமுடியும். பலருடைய நடிப்பு மனதைத் தொடும்வகையில் அமைந்துள்ளதெனிலும், சிலரிடம் இன்னமும் சிறப்பாக வர இடமிருக்கிறது. எல்லாவற்றையும் தாண்டி - படப்பிடிப்பு - கமெரா உத் திகள் என்பவற்றிலுள்ள சிறப்புகளோடு - பல இடங்களில் மனசு பொங்க எங்களைத் தன்னுடன் ஒன்றவைக்க முனையும் படைப்பாக இது உள்ளதைச் சொல்லியாக வேண்டும்.

கடந்த ஞாயிறு காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்பு அலகு வழமையாகத் திரையிடும் நல்ல திரைப்படங்களின் வரிசையில் நமது கடலோரக்காற்றையும் திரையிட்டு, பின் பார்வையாளருடன் கலந்துரை யாடலையும் மேற்கொண்டது. மிக நல்ல முயற்சி. பலரும் தமது அபிப் பிராயங்களை வெளியிட்டார்கள். நல்ல கருத்துக்கள் பலவற்றை அறிய முடிந்தது. இத்தகைய நல்ல படங்களை இலவசமாக ஒவ்வொரு ஞாயிற் றுக்கிழமை காலை 10 மணிக்குக் காணும் வாய்ப்பை அவர்கள் தொடர்ந்தும் தருகிறார்கள். காண்பவர்களின் தொகையோ மிகச்சொற்பமாக இருக்கிறது.

மீண்டும் சந்திப்போம்.

# சர்வதேச புலனாய்வு அரசியல்

(நேற்றைய தொடர்ச்சி)

இப்போது உங்களுக்கு வேறு சில சந்தேகங்கள் ஏற்படலாம். அவற்றை நீங்கள் கேட்பதற்கு முன்னர் நானே கூறிவிடுகிறேன்.

ஈராக், 1990 களில் நடந்த வளைகுடா யுத்தத்தின் பின்னர் அணு ஆயுத உற்பத்தியில் கவனம் செலுத்தும் என்பதை அமெரிக்கா போன்ற வல்லரசுகள் ஊகித்திருக்காதா? ஈராக்மீது ஐ.நா பொருளாதாரத் தடைவிதித்துள்ள நிலையில், ஐ.நா. பாது காப்புச் சபையில் (Security Council) பங்குபற்றும் ஜேர்மனியிலுள்ள நிறுவனம் ஒன்று - ஈராக் கிற்கு இலத்திரனியல் ஆளிகளை (Electronic Switch) ஏற்றுமதி செய் வதை ஜேர்மனி ஏன் தடைசெய்யவில்லை? எல்லாவற்றிற்கும் மேலாக கடந்த வருடம் நடந்ததாகக் கூறப்படும் இந்த சட்ட விரோதமான (Illegal) ஏற்றுமதி பற்றி இவ்வளவு நாட்கழித்து இப்போது மாத்திரம் எப்படி விடயம் கசிந்தது. இந்தச் சந்தேகங்கள் எல்லாவற்றிற்குமே பதில்கள் இருக்கின்றன.

ஐ.நா. பொருளாதாரத் தடை விதித்த பின்னர் - ஈராக்கிற்கு சந்தேகத்திற்குரிய பொருட்களையே ஏற்றுமதி செய்தது ஜேர்மன் நிறுவனம் மாத்திரமல்ல, ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர்களாக இருக்கும் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளின் நிறுவனங்கள் கூட ஈராக்கிற்கு சந்தேகத்திற்குரிய பொருட்களை ஏற்றுமதி செய்து வந்திருக்கின்றன என்ற அதிர்சசியான தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. இதில் வேடிக்கை என்னவென்றால், இந்த விபரங்களையெல்லாம் வெளியிட்டது ஐ.நாவோ அல்லது வேறு சர்வதேச யுத்தக் கண்காணிப்பு அமைப்புக்களோ அல்ல. சாட்சாத் ஈராக்தான் இந்த அதிர்ச்சியான தகவல்களைப் பகிரங்கப்படுத்தியிருக்கிறது என்பதுதான் இங்குள்ள வியப்பான உண்மை. ஈராக், ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு 11 ஆயிரம் பக்க அறிக்கை ஒன்றைக் கொடுத்திருக்கிறது. அதில் சுமார் 150 அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மன், பிரான்ஸ் நிறுவனங்களின் பெயர்களை ஈராக் வெளியிட்டிருக்கிறது. அதன்படி, இந்த 150 நிறுவனங்களும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ சதாம் ஹுசைனின் ஆயுதத் தயாரிப்பு நடவடிக்கைகளுக்கு உதவியிருக்கின்றன. அதுவும் ஐ.நாவின் பொருளாதாரத் தடை அமுலில் இருக்கும் இதே காலப் பகுதியில் இந்த விடயமெல்லாம் எப்படி வெளியே கசிந்தது என்பது ஒரு சுவாரஸ்யமான



ஈராக்கில் நுழைந்து ஆயுதங்களைத் தேடும் ஐ.நா கண்காணிப்பாளர்களின் வாகனங்கள் பின்னணியில் இருக்க, நீங்கள் என்ன செய்துவிட முடியும் என்கின்ற தோரணையில் காவலில் இருக்கும் ஒரு ஈராக்கியப் படை வீரன்.

விடயம். ஐ.நா பாதுகாப்புச்சபை, ஈராக்கிடம் அவர்கள் நாட்டில் நடைபெறும் ஆயுதத் தயாரிப்புக்கள், ஆயுத சேமிப்புக்கள, ஆயுதக்கிடங்குகள் பற்றிய விரிவான அறிக்கை ஒன்றைக் கொடுக்கும்படி அடிக்கடி நிர்ப்பந்தம் செய்து கொண்டிருந்தது. ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிர்ப்பந்தம் என்று சொன்னால், அது ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தரமான 5 உறுப்பினர்களின் நிர்ப்பந்தம் என்றே கூறலாம். ஐ.நா. பாதுகாப்புச் சபையின் 5 நிரந்தர உறுப்பினர்களும் அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், ரஷ்யா மற்றும் சீனாவே அவை. தொடக்கத்தில் இந்தக் கோரிக்கைகளை ஈராக் கண்டு கொள்ளாமல் மௌனமாக இருந்துவிட, இந்த 5 நாடுகளும் விடாமல் அறிக்கை தா, அறிக்கை தா என்று நிர்ப்பந்திக்கவே, ஈராக்கின் வெளிவிவகார அமைச்சு ஒருவிடயத்தைச் சொன்னது. அறிக்கை தருவதில் சிக்கலில்லை. ஆனால், அந்த அறிக்கையின் மூலம் உங்கள் எல்லோரையும் சந்திக்கு இழுத்து விடுவோம், சம்மதமா என்ற ரீதியில் ஈராக்கின் வெளிவிவகார அமைச்சுக் கருத்துக் கூறியது. சுருக்கமாகச் சொன்னால் ஈராக் எடுத்தது - சும்மா இருக்கிறாயா? அல்லது சொரூபத்தைக் காட்டட்டுமா என்பது போல ஒரு பார்வை. அப்படியும், ஐ.நா.பாதுகாப்புச் சபை (Security Council) நாடுகள் நிர்ப்பந்திக்காமல் சும்மா இருக்கவில்லை. ஈராக்கும் உடனே தனது சொரூபத்தைக் காட்டிவிட்டது. 11 ஆயிரம் பக்க அறிகையை ஐ.நா.பாதுகாப்புச் சபையில் தாக்கல் செய்தது.

இந்த அறிக்கை முதலில் பாதுகாப்புச் சபையின் பெரிய சகோதரனான அமெரிக்காவின் கைகளில் தான் போய்ச்சேர்ந்தது. அதில் வெளியிடப்பட்டுள்ள விடயங்களைப் பார்த்தபோது அமெரிக்காவுக்குத் தலை சுற்றியிருக்கவேண்டும். அந்த அளவுக்கு அமெரிக்க நிறுவனங்கள் மாத்திரமல்ல, அமெரிக்க அரச திணைக்களங்களான ஐக்கிய அமெரிக்க சக்தி அமைச்சு, ஐக்கிய அமெரிக்க நீதி அமைச்சு (U.S.Minstry of Energy, U.S.Ministry of justice) எல்லாவற்றையும் சந்திக்கு இழுத்திருந்தது ஈராக்கின் 11 ஆயிரம் பக்க அறிக்கை. சனிக்கிழமை பகல் அமெரிக்காவின் கைக்கு வந்த இந்த அதிரடி அறிக்கையை அமெரிக்கப் பாதுகாப்புச் சபை, தனக்குள்ள அதிகாரத்தை வைத்து மத்திய உறுப்பினர்களின் கண்களில் காட்டாமல் 'லபக்'கிக் கொண்டு போய்விட்டது. ஆனால், விடயம் பாதுகாப்புச் சபையிலுள்ள மற்றைய முக்கியமான அங்கத்துவ நாடுகளுக்குத் தெரியவர, வேறு வழியில்லாமல் தனக்குக் கிடைத்த அறிக்கையில் 4 பிரதிகள் தயாரித்து - மற்றைய நிரந்தர அங்கத்துவ நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனா ஆகியவற்றுக்கு மாததிரம் கொடுத்தது. ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சுழற்சிமுறையில் (Rocketing Members) அங்கத்துவம் வகிக்கும் மற்றைய நாடுகளின் கண்களில் ஈராக்கின் அறிக்கையைக் காட்டவே இல்லை. ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு ஈராக் கொடுத்த அறிக்கையை அமெரிக்கா வைத்து, இப்படி ஒளித்துப் பிடித்து விளையாடிக்கொண்டிருக்க, அதேநேரத்தில் அந்த அறிக்கையின் முழுமையான வேறொரு பிரதி வேறொரு இடத்திலிருந்து வெளியீடு செய்யப்பட்டது.

ஐ.நா.பாதுகாப்புச் சபைக்கும் கொடுக்கப்பட்ட அறிக்கையின் மூலப் பிரதி (Original) அமெரிக்காவின் கைகளில் போய்விட, அமெரிக்காவில் இருந்து 4 பிரதிகள் மாத்திரம் எடுத்து பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, சீனாவுக்கு கொடுத்த நிலையில் - மற்றைய 10 நாடுகளும் ஏன் இந்த அறிக்கை தங்களுக்குக் கொடுக்கப்படவில்லை? என்று ஐ.நா.பாதுகாப்புச் சபையை வினவத் தொடங்கின. இந்த இக்கட்டான நிலையில் வேறுவழியில்லாமல் அமெரிக்கா தன்னிடமிருந்த மூலப்பிரதியில் பட்டியலிடப்பட்டிருந்த அமெரிக்கா, ஜேர்மன், பிரிட்டன், பிரான்ஸ் நிறுவனங்களின் பெயர்களையெல்லாம் வெட்டி Edit செய்துவிட்டு அமெரிக்க அமைச்சுக்கள் பற்றிய தகவல்களையெல்லாம் நீக்கிவிட்டு 11,000 பக்கங்களில் இருந்து 7,600 பக்கங்களாகச் சுருக்கப்பட்ட 10 பிரதிகளை ஐ.நா. பாதுகாப்புச் சபையின் மற்றைய 10 நாடுகளின் கைகளில் ஒரு வாரத்தின் பின்னர் கொடுத்தது.

இந்தச் சுருக்கப்பட்ட 10 பிரதிகளும் 10 நாடுகளின் கைகளில் கிடைத்த நேரத்தில், 'பேர்லின்' பத்திரிகை, அமெரிக்காவினால் வெட்டி Censure செய்யப்பட்ட சில பகுதிகளைத் தன்னுடைய பத்திரிகையில் வெளியிட்டது. இது அமெரிக்காவுக்கும், ஐ.நா.பாதுகாப்புச் சபைக்கும் பெரிய சங்கடமாகப் போய்விட்டது.

யோசித்துப் பாருங்கள்.

ஐ.நா. பாதுகாப்புச்சபை ஈராக்கிடம் ஓர் அறிக்கை தருமாறு மேலும், மேலும் நிர்ப்பந்தித்தது. அதற்குப் பாதுகாப்புச் சபையிலுள்ள 5 நிரந்தர அங்கத்துவ நாடுகளும் 10 சுழற்சிமுறையில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளும் ஆதரவு தெரிவித்துக் கையெழுத்துப் போட்டிருந்தன. ஈராக்கும் ஓர் அறிக்கையொன்றைத் தாக்கல் செய்திருக்கிறது. ஆனால், அந்த அறிக்கையை முக்கியமான அங்கத்துவ நாடான அமெரிக்கா, தானே அமுக்கிக்கொள்ளப் பார்க்கிறது. அப்படியிருந்தும் அந்தக் கதை கொஞ்சம் வெளியேவர முக்கியமான மற்றைய 4 நாடுகளுக்கும் மாத்திரம் அந்த அறிக்கையைக் கொடுத்துவிட்டுப் பேசாமல் இருக்கப் பார்க்கிறது. அப்படியும் அந்த அறிக்கை பத்திரிகையொன்றின் வாயிலாக வெளியேவர அதன்பின்னர் பாதுகாப்புச் சபையில் அங்கத்தவராக இருக்கும் 10 நாடுகளுக்கு அந்த அறிக்கையின் முழுமையான Version ஐக் கொடுக்காமல் Edit செய்யப்பட்ட, சுருக்கப்பட்ட ஒன்றைக் கொடுக்கிறது.

**கனடாவில் இருந்து**
**ரிஷி**

இவ்வளவும் நடந்த பின்னரும் அந்த அறிக்கையின் முற்று முழுதான Edit பண்ணப்படாத முழுமையான பதிப்பு ஒன்று பத்திரிகையொன்றின் வாயிலாக வெளியே வருகிறது.

ஈராக் மீது அமெரிக்கா போருக்குத் தயாராகும் இந்த நேரத்தில், இதிலிருந்து தெரிவதெல்லாம் அமெரிக்காவும் மேற்கத்தைய ஊடகமும் (Western Media) சொல்லிக் கொண்டிருப்பதுபோல சதாம் ஹுசைன் ஈராக்கின் எங்கோ நிலத்திற்கு அடியில் (Under ground) இல் ஒளிந்திருக்கும் ஆள் மாத்திரமல்ல அரசியல் ரீதியாகவும் காய் நகர்த்தத் தெரிந்த நபர் என்பது.

இந்த விடயத்தில் அமெரிக்காவும், ஐ.நாவும் செய்தவை பொல்லுக் கொடுத்து அடிவாங்கியது என்றும் சொல்லலாம். (முற்றும்)

# நாவாந்துறையில் பதற்றம்; பொலிஸார் கண்காணிப்பில்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறைப் பகுதியில் இரு உதைபந்தாட்ட அணிகளின் ஆதரவாளர்களிடையே நடைபெற்ற கோஷ்டி மோதலைத் தொடர்ந்து அப்பகுதியில் பதற்றம் நிலவி வருவதனால், பதற்றத்தைத் தவிர்க்கும் வகையில் நேற்றும் பொலிஸார் தீவிரமாக கடமையில் ஈடுபட்டதாக யாழ். பொலிஸ் நிலையம் அறிவித்துள்ளது.

மேலும், இப்பகுதியில் உள்ள இரு கோஷ்டிகளையும் சமரசம் செய்யும் முயற்சியில் பொலிஸார் தொடர்ந்தும் ஈடுபட்டுவருவதாகவும் ஆனால், அவ்விரு கோஷ்டியினரும் தொடர்ந்தும் முறுகல் நிலையிலேயே காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் கடந்த 13 ஆம் திகதி பாஷையூர் சென்.அன்ரனீஸ் அணிக்கும் நாவாந்துறை சென். நீக்கலஸ் அணிக்கும் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியை அடுத்தே, இவ்விரு அணிகளின் ஆதரவாளர்களும் அடிதடி வன்முறையில் ஈடுபட ஆரம்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (கி-ரா)

## காட்டிற்குச் சென்றவர் கரடி கடித்துக் காயம்

(யாழ்ப்பாணம்)

காட்டிற்குள் தடி வெட்டச்சென்ற சமயம் கரடி கடித்ததால் காயமடைந்தவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 13 ஆம் திகதி புதூர், புதுவிளான்குளத்தைச் சேர்ந்த கணேசராசா (வயது 45) என்பரே காட்டிற்கு சென்றவேளை, வலது கையில் கரடியின் கடிக்குள்ளானார்.

இவர், மல்லாவி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்பு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டார்.

## காய்ச்சலுக்கு சிறுமி பலி

புதுக்குடியிருப்பு ஆதார வைத்திய சாலையில் கடந்த 20 நாட்களாக இனந்தெரியாத காய்ச்சல் நோய்க்குச் சிகிச்சை பெற்று பின்னர், யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அழைத்துவரப்பட்ட சிறுமி, வைத்திய சாலையில் அனுமதிக்கப்படும்போதே மரணமடைந்துள்ளார். ஆஸ்பத்திரி வீதி, முல்லைத்தீவைச் சேர்ந்த ருபன் மேரி (வயது 02) என்ற சிறுமியே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

## பட்டாசுகளால் பிரச்சினை: 30 முறைப்பாடுகள் பொலிஸில்!

(யாழப்பாணம்)

பொது இடங்களில் பட்டாசு கொளுத்துவோரால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக, யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இளைஞர்கள் பொது இடங்களில் நின்று பட்டாசு கொளுத்தும் போது, பொதுமக்கள் சிரமமடைவதாகவும், வேறுசிலர் வீதியிலிருந்து வீட்டு வளவிற்குள் பட்டாசுகள் கொளுததி எறிவதாகவும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த இரு நாட்களில் மட்டும் இவ்வாறான முப்பதிற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் யாழ்.பொலிஸ் நிலையத்தில் பதிவாகியுள்ளன. (கி,ரா)

## சிங்கள மாணவி கொலை; சிப்பாய் தேடப்படுகிறார்

தென்னிலங்கையில் - தனியார் வகுப்புக்குச் சென்ற மாணவி கொலை செய்யப்பட்டமை தொடர்பாக தப்பி ஓடிய இராணுவச் சிப்பாய் ஒருவரை பொலிஸார் தேடிவருகின்றனர்.

19 வயதுடைய நிசன்சல '-விஜய பண்டார என்ற மேற்படி மாணவியின் கொலை தொடர்பாக, அஜித் ரோகண என்ற தப்பி ஓடிய இராணுவச் சிப்பாயையே பொலிஸார் தேடிவருவருகின்றனர்.

# ஹக்கீம் கொலை முயற்சி: சி.ஐ.டி. விசாரணைகள் ஆரம்பம்

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை கொலை செய்ய முயன்றது தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

கைதான சந்தேக நபர்களில் நீர்கொழும்பு மாநகரசபை உறுப்பினரான ஹஸ்மி ரஸ்ஸும் அடங்குகின்றார்.

இவரைப் பொலிஸார் நீதிமன்றில் ஆஜர் செய்தபோது, நீதிமன்றக் கூண்டிலிருந்தபடியே,சிலாபம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆனந்த அல்விஸ்ஸுக்கு இவர் அச்சுறுத்தல் விடுத்தார். இதையடுத்து நீதிபதி 500 ரூபா தண்டப் பணம் விதித்ததோடு சந்தேக நபரை எச்சரித்தார். இந்தக்குழுவில் மூவர் யாழ்ப்பாணத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட தமிழ் இளைஞர்கள் எனத் தெரியவருகிறது.

## சுவாமியிடம் கேள்வி ஜே.வி.பி. உதவுகிறது

ஜே.வி.பி. சார்பு இணையத்தளம் ஒன்று சுப்பிரமணியம் சுவாமியை விசேட விருந்தினராக அழைத்து அவரிடம் கேள்விகளைக் கேட்க வசதி செய்திருக்கிறது.சமாதானப் பேச்சுக்களில் இந்தியாவின் நிலைப்பாடு மற்றும் புலிகள் தொடர்பான நிலைப்பாடு குறித்து சுப்பிரமணியம் சுவாமியிடம் வினாக்களை எழுப்பலாம் என அந்த இணையத்தளம் அறிவித்திருக்கின்றது.

## சிங்கப்பூர் செல்லவிருந்த பயணியின் வயிற்றிலிருந்து மீட்கப்பட்ட இரத்தினக்கற்கள்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து சிங்கப்பூருக்குச் செல்ல முயன்ற நபர் ஒருவரின் வயிற்றிலிருந்து 30 மில்லியன் ரூபா பெறுமதியான இரத்தினக்கற்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறிப்பிட்ட பயணி எக்ஸ் - றே சோதனைக்குட்படுத்தப்பட்டபோதே அவரது வயிற்றில் இரத்தினக்கற்கள் இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து பொலிஸார் அவரை நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு வயிற்றிலிருந்த இரத்தினக்கற்கள் வெளியேற்றப்பட்டன. பயணியின் வயிற்றில் இருந்த இரத்தினக்கற்களின் மொத்தப் பெறுமதி 30 மில்லியன் ரூபா எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# 'பொங்குதமிழ்' 2 ஆம் ஆண்டு நிகழ்வு நாளை யாழ். பல்கலைக்கழகத்தில்!

(யாழ்ப்பாணம்)

'எமது நிலம் எமக்கு வேண்டும்' என்ற செய்தியை சர்வதேசமெங்கும் எடுத்துச் சொல்வதாக நாளை நடைபெறவிருக்கும் பொங்குதமிழ் இரண்டாம் ஆண்டு நிகழ்வுகள் அமையவுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ள முக்கிய வைபவத்தில் பொங்குதமிழ் செய்தியும், பொங்குதமிழ் பிரகடனமும் வெளியிடப்படவுள்ளன.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார் பகுதிகளில் பொங்குதமிழ் நிகழ்வுகளுக்கு உழைத்தோரில் பிரதிநிதிகளாக தலா பதினைந்து பேர் பங்குபற்றவுள்ளனர்.

நாளைய தினம் - யாழ்.பல்கலைக்கழக மாணவர் பொது அறையில், தமிழர்தம் எழுச்சியை வெளிக்காட்டும் கண்காட்சியொன்றும் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக பொங்குதமிழ் செயற்பாட்டுக் குழுவினர் பிரகடனம் ஒன்றையும் வெளியிடடுள்ளனர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இரு வருடங்களுக்கு முன்னர் இதே நாட்களில்தான் நாம் பொங்குதமிழராய் எழுச்சி கொண்டோம். நமது உள்மன விருப்பு சுயநிர்ணய உரிமைக்கான தாகம் என்பதைத் தரிசித்தோம். இத்தரிசிப்புச் சடங்குகள் ஊர் ஊராய் வீடுகள் தோறும் நடந்தது. மக்களின் அணிதிரள்வைக் கண்டு அதிர்ச்சி அடைந்த இராணுவமும் பொலிஸாரும் "சுடுவோம்" என மிரட்டி மக்களின் வரவைத் தடுக்க, யாழ்.பல்கலைக்கழகத்தைச் சூழ இராணுவ வேலி அமைந்தது.

வீண் உயிரிழப்புக்களைத் தவிர்க்க மக்களை வரவேண்டாம் என வேண்டி, உங்கள் பிரதிநிதிகளாக பல்கலைக்கழக வளாகத்தினுள் நின்று - தமிழ் மக்களின் அபிலாஷை - மரபுவழித் தாயகம், தமிழ்த்தேசியம், சுயநிர்ணயம் என வெளிப்படுத்தினோம்.

அவ் வெளிப்பாடு வடக்கு - கிழக்கு எங்கும், உலகெங்கும் பரந்து விரிந்தது. தவறான கற்பிதங்களை கொண்டிருந்த சிங்கள மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் மறுக்க இயலாத வகையில் தமிழர்களின் ஆத்ம அபிலாஷை நிரூபிக்கப்பட்டது. யுத்தகளத்தில் உச்ச நிலையிலிருந்த இன முரண்பாட்டை பேச்சுவார்த்தை மேசைக்கு மாற்றுவதில் ஓர் முக்கிய பங்காற்றியது.

தற்போது சமாதான பேச்சுவார்த்தைகள் முனைப்புடன் நடக்கின்றன. இப்பேச்சுக்கள் அர்த்தமுள்ளதாக மாறுவதற்கு மக்களாகிய எமது அக்கறையும் செயற்பாடும் அத்தியாவசியமாகும். நாம் இக்கடமையிலிருந்து தவறும் நிலையில், மீண்டும் பெறுமதியான உயிர்களை விலையாக கொடுப்பதோடு, எமது நகரங்களை உருக்குலைக்கும் யுத்தம் உருவாவதற்கு வழிவிட்டுக் கொடுத்தவர்களாவோம்.

-எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


### கேணல்....

நேற்று முன்தினம் முதல் வடக்குக் கிழக்குப் பிரதேசமெங்கும் கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் எழுச்சி நிகழ்வுகள் பொது மக்களாலும், பொதுநிறுவனங்களாலும், உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

### முப்படை....

உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடாபாக பிரிததானிய மற்றும் இந்திய ராணுவ அதிகாரிகள் ஆலோசனை வழங்கிய பின்னர், அதனை செயற்படுத்துவது குறித்து பிரதானமாக இன்றைய சந்திப்பில் ஆராயப்பட்டதாகத் தெரிய வருகின்றது. (200)

## யாழில் உலாவும் கள்ள நோட்டு



யாழ்ப்பாணத்தில் ஆயிரம் ரூபா கள்ளநோட்டுக்கள் உலாவருவதாக 'நமது ஈழநாடு' செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே. அந்தவகையில் கன்னாதிட்டி பகுதியில் உள்ள அடகுக் கடையொன்றில் இருந்து வாடிக்கையாளர் பெற்ற கள்ளநோட்டைப் படத்தில் காணலாம். குறிப்பிட்ட வாடிக்கையாளர், கள்ளநோட்டென இதை இனங் கண்டதால் - அவருக்கு உண்மையான நோட்டொன்று அடகுக் கடை உரிமையாளரால் வழங்கப்பட்டது. இதைப்போல பல நோட்டுக்கள் யாழ்ப்பாணத்தில் உலாவருகின்றன.

இந்த கள்ளநோட்டுக்கள் - நீர் எழுத்தாலான சிங்க அடையாளத்தைக் கொண்டிராததும், உண்மையான நோட்டுடன் ஒப்பிடுகையில் மிக மெல்லிய தடிப்பம் கொண்டதாக அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## மர்மப் பொருள் வெடித்ததில் 5 மாணவருட்பட 6 பேர் பலி

(கொழும்பு)

விளையாட்டு மைதானத்திலிருந்த மர்மப் பொருளொன்று வெடித்ததில் ஐந்து பாடசாலைச் சிறார்கள் உட்பட ஆறுபேர் பலியான சம்பவமொன்று - நேற்றுக் காலை எப்பாவெல பகுதியில் நடை பெற்றுள்ளது.

எப்பாவெல - கெமுனுபுரவில் உள்ள மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்கள், விளையாடுவதற்காக அடுத்துள்ள மைதானமொன்றுக்குள் சென்றனர்.

அங்கு அவர்கள் இனம்காண முடியாத பொருளொன்றைக் கண்டு அதனை எடுத்தபோது - அது வெடித்தது.

இதன்போது - அருகிலிருந்த மேலும் பல சிறார்கள் படுகாயமடைந்ததாகவும், கிரனைட் ஒனறே இவ்விதம் வெடித்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## இலங்கை போன்று அமெரிக்காவும் பாதுகாப்பு அச்சுறுத்தல் கொண்டது

### அமெரிக்க வெளியுறவு பிரதி அமைச்சர் ஆர்மிரேஜ்

(கொழும்பு)

இலங்கை எதிர்நோக்கும் பாது காப்பு அச்சுறுத்தல்கள் போன்றே அமெரிக்காவும் எதிர்நோக்குவதாக அமெரிக்க வெளியுறவு அமைச் சர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் தெரிவித் துள்ளார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான போரை வெற்றி பெறுவது மட்டுமல்ல, உலகின் ஏனைய நாடுகளுடன் நெருங்கிய தொடர்புகளை பேணும் வாய்ப்புக்களையும் அமெரிக்கா பெற்றுள்ளது. இலங்கை முதல் ஆப்கானிஸ்தான் வரை எதிர்நோக்கும் அதே பாதுகாப்பு பிரச்சினைகளை அமெரிக்காவும் எதிர்நோக்குகின்றது எனவும் ஆர்மிரேஜ் தெரிவித்துள்ளார்.

### பொங்கல்....

சமாதானச் செயலகச் செயலர் புலித்தேவன், தங்கன் ஆகியோர் வரவேற்று, சிறான் அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றனர்.

சிறான் அலுவலகத்திற்கு வருகை தந்த இவர்களை- தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், ஜோய் மகேஸ்வரன், சிறான் பணிப்பாளர் செல்வின் ஆகியோர் கைலாகு கொடுத்து வரவேற்றதுடன், தைப்பொங்கல் வாழ்த்துக்களையும் பரிமாறிக் கொண்டனர்.

பின்னர், காலை 10.15 மணியளவில் சிறான் கூட்டம் ஆரம்பமானது. இக்கூட்டம் ஆரம்பமாகும் முன் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் பொங்கல் சாப்பாடுகளுடன் பனையோலையில் வடிவமைக்கப்பட்ட தைப்பொங்கல் வாழ்த்துச்செய்தியுடன் கூடிய ஓலைச்சுவடி ஒன்றும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் வழங்கப்பட்டது.

இரு அமர்வுகளாக நேற்றைய தினம் நடைபெற்ற இக்கூட்டத்தில, நோர்வே தரப்பில் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க், ஸ்ரோங்லாண்ட், றொகுறூப் பண்ட்ற் ஆகியோரும் சிறான் பணிப்பாளர் செல்வின் இரேனியஸ், தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஜோய் மகேஸ்வரன், விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் பாலகுமார், மட்டு-அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் பாவா மற்றும் ஜப்பானிய பிரதிநிதிகள் அன்டோ, யுனிற்றானி ஆகியோர் கலந்துகொண்டனர்.

### இன்றைய...

இலங்கைக்கான உலகவங்கியின் பிரதிநிதி பீற்றர் கறோல், ஆகியோருடன் ஜப்பானிய அரசின் விசேட பிரதிநிதி யசுஷி அகாஷியும் இன்று கலந்துகொள்ளவுள்ளனர்.

### சிறானுக்கு...

கும் நாடுகள் கோரியுள்ளதாக நேற்றைய சிறான் கூட்டத்தில் பிரதம அனுசரணையாளராகக் கலந்துகொண்ட நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் தெரிவித்தார்.

பதவி வெற்றிடங்கள்
விற்பனைப் பிரதிநிதிகள் / பயிலுநர்கள்
நீங்கள் பத்திரிகைத்துறையின் சந்தைப்படுத்தலில் பணிபுரிய ஆர்வமுடையவர்களா?
"நமது ஈழநாடு" உங்களை எதிர்பார்த்து நிற்கிறது!
தகைமைகள்:
- 30 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சிறந்த தொடர்பாடல் திறன் மிக்கவராக இருத்தல் வேண்டும்.
- தனித்தோ/குழுவாகவோ செயற்படும் திறமை.
- பத்திரிகைத்துறையில் முன்னனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- முன்னனுபவமில்லாதோர் பயிலுநராகக் கருதப்படுவர்.
- மாநகரசபை எல்லைக்குள் வதிவோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

நீங்கள் தகுதியானவர்கள் எனின், கவர்ச்சிகரமான சம்பள அளவுத்திட்டங்களும், மேலதிக நிதிசார் நன்மைகளும் காத்திருக்கின்றன.

எமது சந்தைப்படுத்தல் பகுதியுடன் நீங்கள் இணைந்து கொள்ள 18.01.2003 அல்லது அதற்கு முன்னர் சுயவிபரக் கோவையுடன் நேரில் அலுவலகத்திற்குச் சமுகம் தரவும்.

267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P- 2225107, 2223922.

ஆளணி முகாமையாளர்,
நமது ஈழநாடு.

MURTHY ADVERTISING SERVICES
2789
யாழ்.F.M. இல் விளம்பரம் செய்திட,
யாழ். - கொழும்பு பிரயாண ஒழுங்கு செய்திட,
நாள் வாடகைக்கு ஆட்டோ அமர்த்திட
மூர்த்தி
விளம்பரசேவை,
தேவி அச்சக ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
போன்: 2789

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பராசக்தி கணபதிப்பிள்ளை

சரசாலையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி நகரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி கணபதிப்பிள்ளை நேற்று முன்தினம் (14.01.2003) கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீ.எம்.கணபதிப்பிள்ளை (நிறுவுநர், **VMK Jewellers**) அவர்களின் அன்பு மனைவியும், சிவபாக்கியம் செல்லத்துரை, ஜெயலட்சுமி தர்மேந்திரன் (**Canada**), புலேந்திரன் (உரிமையாளர், **VMK Jewellers**), காலஞ்சென்ற குலேந்திரன் (உரிமையாளர், **VMK Jewellers**) மற்றும் சீதாலட்சுமி - யோகதாசன் (**Canada**), ராதாலட்சுமி - வசந்தகுமார் (**Canada**) ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற செல்லத்துரை (முன்னாள் அதிபர், யா/விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம், மீசாலை) மற்றும் தர்மேந்திரன் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப அலுவலர் நீர்ப்பாசனத் திணைக்களம், **Canada**), நிர்மலராணி - புலேந்திரன், திகழ்மதி - குலேந்திரன், யோகதாசன் (பொறியியலாளர், **Canada**), வசந்தகுமார் (பொறியியலாளர், **Canada**) ஆகியோரின் மாமியாரும் அகல்யா - ராஜகாரியர் (**UK**), கௌசல்யா ஸ்ரீசங்கர் (**Canada**), மீரா ராஜேந்திரன் (**Forut**, யாழ்ப்பாணம்), லாவண்யா, பார்த்தீபன் (**Leeds Metropolitan University, UK**), மேனகா(**University of Toronto, canada**), ரேகா (**canada**), மாதங்கி, பிரசாந், கோகுல், கல்பனா (**Canada**), ஆதித்தன் (**Canada**), கார்த்திகா, அபராஜிதன், பிரசோதிக்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், சுருதி (**UK**) யின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

*52, டச்சு வீதி,*
*சாவகச்சேரி.*
**T.P.No** -070-212989.

தகவல்:-
**வீ.எம்.கே.குடும்பத்தினர்.**

இல.19, 36 ஆவது ஒழுங்கை,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06,
**T.P.No -** 01-361253.

(205)

### கனகரத்தினம் கணேசகுமார்

குமரபுரம், பரந்தனை நிரந்தர முகவரியாகவும், குரவயல், உடையார் கட்டை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் தம்பதிகளின் அன்புமகன் கணேசகுமார் 08.12.2002 அன்று லண்டனில் அகால மரணமானார்.

அன்னார் கனகரத்தினம், மல்லிகாதேவி ஆகியோரின் அன்பு மகனும், விநாயககுமார் (கரைச்சி வடக்கு - ப.நோ.கூ.சங்கம்), விஜயமலர் (பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிமனை - கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவகுமாரின் (ஆயப்பகுதி, நடுவப் பணியகம் - கிளிநொச்சி) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2003) பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உடையார்கட்டு இந்து மயாணத்தில் தகனம் செய்யப்படும்.

*உடையார்கட்டு தெற்கு,*
*உடையார்கட்டு.*

(சி/512)

தகவல்:-
**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை - இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.